Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 113 | வெள்ளிக்கிழமை | பங்குனி 6 ஆம் நாள் 19 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## இலங்கைக்கு எதிரான வரைவு:

# இந்தியா மௌனம்

### இலங்கை வெளிவிவகார அமைச்சரின் தகவலையும் நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 19

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங் கைக்கு எதிரான தீர்மான வரைவு தொடர்பில் இந்தியா இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்க வில்லை என்று, இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'த ஹிந்து' ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. 19 ➤

## கொரோனா தொற்றால் ஒருவர் சாவு

கொழும்பு, மார்ச் 19

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக் களம் நேற்று அறிவித்தது. இப்பாகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயது ஆண் ஒரு வரே உயிரிழந்துள்ளார். அதேவேளை, நாட்டில் இது வரை கொரோனாத் தொற் றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 538 ஆக உயர்ந்துள்ளது. (எ-இ)

## பரீட்சைகளை ஒத்திவைக்கும் அவசியம் இல்லை!

கொழும்பு, மார்ச் 19

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை போன்றவற்றை ஒத்தி வைக்க வேண்டிய அவ சியம் இல்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது:

பரீட்சைகளை ஒத்திவைப்பது என்பது பேச்சு மட்டத்திலேயே உள்ளது. இன்னும் தீர்மா னிக்க ப்படவில்லை. இது தொடர்பில் நாம் கலந்துரை யாட வேண்டியது மாணவர்க ளிடமும், ஆசிரியர்களிட முமே. அதற்கு எமக்கு கால அவகாசம் வேண்டும். தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன் 2020 ஆம் 19 ➤

## பிறந்து சில நாள்களேயான சிசுவின் உடல் கண்டுபிடிப்பு!

### பிரசவித்து புதைத்த குற்றச்சாட்டில் 36 வயதுப் பெண்ணொருவர் கைது



வவுனியா, மார்ச் 18

வவுனியா, பம்பைமடுவில் சிசு ஒன்றின் உடல், புதைக் கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தச் சிசுவை, பிரசவித்துப் புதைத்திருக்கலாம் என்ற சந்கே தத்தில் தாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த சில வருடங்களாகக் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வருகின்றார்.

பம்பைமடுவைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயான 36 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைதுசெய் யப்பட்டுள்ளார். இவர் கடந்த திங்கட்கிழமை சிசுவைப் பிரசவித்து. தான் வசிக்கும் காணியில் 19 ➤

### முச்சந்தி முரளி

"இக்கட்டான நேரத்தில
இப்பிடி மதில் பூனை
மாதிரி கள்ளமௌனம்
காக்கிறது
நல்லதுக்கில்லை
கண்டியளோ"



## மானிப்பாய் மருத்துவமனை தாதி ஒருவருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மார்ச் 19

வடக்கு மாகாணத்தில் நேற்று 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய் யப்பட்டது. அவர்களில் ஒருவர் மானிப் பாய் மருத்துவமனையில் பணியாற்றும் தாதி என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி 19 ➤

## இந்திராபுரத்தில் தொற்று: 20 குடும்பங்கள் தனிமை

கிளிநொச்சி, மார்ச் 19

பளை, இந்திராபுரத்தில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட ஒருவர் கடந்த 19 ➤

## இலங்கை மீனவர்கள் 30 பேர் கைது

கொழும்பு, மார்ச் 19

இலங்கை மீன்பிடிப் படகு களைக் கைப்பற்றியுள்ள இந்தியக் கடலோரக் காவல் படை, அதிலிருந்த மீனவர்க ளைக் கைதுசெய்துள்ளது என்று பலநாள் மீன்பிடிப் படகுகளின் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 6 மணியள வில் ஆறு படகுகளை இந்தி யக் கடலோரக் காவல்படை கைப்பற்றியுள்ளது என்றும், இதன்போது 30 மீனவர்க ளைக் கைதுசெய்துள்ளது என்றும் தெரிவிக்கப்ப டுகின்றது.

"இலங்கை ரோலர்கள் அரேபியக் கடலில் மீன்பி டிக்கின்றன. எல்லையில் உள்ள சர்வதேசக் 19 ➤

## மாகாண சபைத் தேர்தல் ஒக்ரோபரில் நடக்கலாம்!

### அரச உயர் வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, மார்ச் 19

பழைய தேர்தல் முறைமையில் ஒக்ரோபர் மாதம் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம் என்றும், அதற்குத் தயாராகுமாறும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு அரச உயர் மட்டங்களால் தெரி விக்கப்பட்டுள்ளது.

மாகாணசபை சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு பழைய முறைமை யின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. 19 ➤

## ஐ.நா. தீர்மானத்தால் பயன் ஏதும் இல்லை

### வேலன் சுவாமிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்ற த்தில் பாரப்படுத்துவதன் மூலமே தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியும். தற் போது ஐ.நா. மனித உரி மைகள் சபையில் கொண்டு வரப்படும் தீர்மா னம் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தராது. இவ்வாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கி ணைப்பாளர் வேலன் சுவாமிகள் 19 ➤

# விசுவமடுவில் சடலம் மீட்பு

கிளிநொச்சி, மார்ச் 19

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டக்கச்சி 'சிவிக்செண்ரர்' பகுதியில் கிணற்றிலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாதாந்த சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் சென்றுவந்த ஒருவரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

கண்டியைச் சேர்ந்தவரும் தற்போது வட்டக்கச்சி பகுதியில் வசித்து வருபவருமான ஆறுமுகம் (வயது - 67) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (கு-113)

# படைகளை நடத்துவது போல நாட்டை நிர்வகிக்க முடியாது!

## அமைச்சர் வீரசேகரவுக்கு மரிக்கார் எம்.பி. சாட்டை



**கொழும்பு, மார்ச் 19**

**இராணுவத்தில் சேவையாற்றியபோது படைகளுக்கு கட்டளையிட்டதைப் போன்று நாட்டை நிர்வகிக்க முடியாது என்று அமைச்சர் சரத் வீரசேகரவிடம் தெரிவிக்க விரும்புகின்றோம். மதரசா பாடசாலைகள் என்றால் என்ன என்பதை முதலில் அவர் புரிந்துகொள்ள வேண்டும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மதரசா பாடசாலைகளை தடை செய்ய வேண்டும் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மதரசா பாடசாலை என்பது ஏனைய மதங்களில் காணப்படும் அறநெறி பாடசாலைகளைப் போன்ற ஒன்றே.

எனவே ஒவ்வொருவரின் தேவைக்கமைய இவற்றைத் தடைசெய்ய முடியாது.

அவ்வாறில்லாமல் தடைசெய்ய அவசியமற்ற விடயங்களை தடை செய்ய வேண்டும் என்று கூறுவது அநாவசியமானது. இவை வெறுக்கத்தக்க பேச்சுகளாகும். மதரசா பாடசாலைகளை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பில் யாராலும் குற்றஞ்சுமத்த முடியாது என்பதை நாம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளோம்.

எனவே அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்காக, மக்கள் மத்தியில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க யாருக்கும் இடமளிக்க முடியாது. இந்த விடயங்களை அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு நினைவுபடுத்துகின்றோம். - என்றார். (கு-இ)

## ஜெனிவா விடயத்தில்

# இலங்கைக்கு தலையிடியாக நாடு கடந்த தமிழீழ அரசு!

## சுட்டிக்காட்டுகின்றது ஆங்கில ஊடகம்

கொழும்பு, மார்ச் 19

சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்த வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசின் முனைப்பு, ஜெனிவா விடயத்தில் சிறிலங்காவுக்கு பெரும் சவாலாக உள்ளது என்று கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

'சிறிலங்காவுக்கு சவாலான வாரம்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள செய்திக் கட்டுரையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா.வில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சரின் உரைக்கு, பதிலுரையாக அமைந்த நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரனின் அறிக்கையைச் சுட்டிக்காட்டி, ஐ.நா. மனித உரிமைகள் சபை விடயத்தில் சிறிலங்காவுக்கு எதிரான தீவிரமான பரப்புரை மேற்கொள்பவராக பிரதமர் வி.உருத்திரகுமாரன் உள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா தொடர்பில் வாக்கெடுப்பை நோக்கி சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவில், சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தும் வகையில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று கூட்டு நாடுகளை நாடு கடந்த தமிழீழ அரசு கோரியுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-இ)

# பதவி விலகினார் கரைதுறைப்பற்று தவிசாளர்

முல்லைத்தீவு, மார்ச் 19

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.தவராசா தன்னுடைய பதவியிலிருந்து விலகுகின்றேன் என்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் கடந்த 15 ஆம் திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு எழுத்து மூலமாக சமர்ப்பித்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச சபை அமர்வின்போதே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பிரதேச சபைத் தேர்தல் நிறைவடைந்த பின்னர் வவுனியா தெற்கு பிரதேச சபைக்கும், கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கும் தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இரண்டு கட்சிகளுக்கும் இடையில் (ரெலோ, புளொட்) செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக இந்தப் பதவி விலகல் இடம் பெற்றுள்ளது. (ஐ19)

# 10 ஆயிரம் பேருடன் இந்தியா போவது அமைச்சர் டக்ளஸின் ஏமாற்று வேலை

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் சுட்டிக்காட்டு

வவுனியா, மார்ச் 19

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுக்க வடக்கில் இருந்து 10 ஆயிரம் மீனவர்களுடன் இந்தியா போவது என்பது அமைச்சர் டக்ளஸின் ஏமாற்று வேலை என்று தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்பாளர் இ.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;


டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்தவரையில் அவர் அமைச்சர். தனது அமைச்சுப் பதவியை தமிழ் மக்கள் மத்தியில் தக்கவைத்துக்கொள்வதற்கான ஒரு ஏமாற்று நாடகமாகவே நாம் இந்த விடயத்தை பார்க்கின்றோம்.

கடற்கரையில் இருந்து 10 கிலோமீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தில் ரோலர்கள் வந்து தொழில் செய்கின்றன என்பது அதிகாரமுள்ள ஓர் அமைச்சருக்குத் தெரியும். இதை கரையில் இருந்து நாங்கள் பார்க்கின்றோம்.

கொக்குத்தொடுவாயில் இருந்து தீவகம் வரை 50 மீற்றருக்கு ஒரு கடற்படையின் பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டுள்ளது. கடற்படைக்கு இந்திய ரோலர் வருவது தெரியும். எனவே அதனைப் பிடிக்க முடியாது என்றால், தான் அமைச்சர் என்று அவர் ஏன் சொல்கின்றார்?

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் பத்தாயிரம் பேருடன் இந்தியா செல்வதென்பது மக்களை ஏமாற்றும் விடயமே என்றார். (ஐ-110)

# கொரோனா அறிகுறியா? பி.சி.ஆர். செய்யலாம்!



சாவகச்சேரி, மார்ச் 19

தென்மராட்சிப் பிரதேசத்தில் கொவிட்- 19 தொடர்பான அறிகுறி மற்றும் சந்தேகம் உள்ளவர்கள் பிரதி செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாள்களில் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் இடம்பெறும் எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைக்கு தம்மை உட்படுத்திக்கொள்ள முடியும் என சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

மேலும் , காய்ச்சல், இருமல், தொண்டை அழற்சி, மூச்செடுப்பதில் சிரமம் மற்றும் சுவாசக் கோளாறு போன்ற அறிகுறிகள் காணப்படின் உடனடியாக சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துடன் தொடர்பு கொண்டு பரிசோதனை செய்துகொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# 19 ஆவது நாளாக தொடர்கிறது யாழ். நகர கால்வாய் கழிவகற்றல்



யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியோரம் வண்ணான் குளத்தில் ஆரம்பித்து பண்ணைக் கடலைச் சென்றடையும் கால்வாய் துப்புரவு செய்யப்படும் பணியை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுச் சென்று பார்வையிட்டார்.

பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுடன் கலந்துரையாடினார்.

சுமார் 30 தொழிலாளர்கள் அந்தப் பணியில் ஈடுபட்டுவரும் நிலையில், அவர்களுக்கு நேற்றிரவு உணவுப் பொதிகளையும் வழங்கினார்.

நேற்று 19ஆவது நாளாக இத் துப்புரவுப் பணி இடம்பெற்றுவருகின்றது. (த319,320)

# சுயாதீன ஊடகவியலாளர் கடத்தப்பட்டு சித்திரவதை

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

**கொழும்பு, மார்ச் 19**

**சுயாதீன ஊடகவியலாளரான சுஜீவ கமகே கடத்தப்பட்டு சித்திர வதைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். ஊடகவியலாளர்களின் பாது காப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் விடுக்கும் சம்பவமாக இதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுவதுடன், இது தொடர்பில் அரசு உடனடி விசாரணை நடத்தி நாட்டு மக்களுக்கு உண்மைத் தகவலை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளது.**

சுதந்திர ஊடக இயக்கம் இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

சுஜீவ கமகே கூறிய விடயங்கள் மற்றும் அறிக்கையிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக, அவர் மீரிகம நகரத்தில் வைத்தே கடத்தப் பட்டுள்ளார். ஒரு கறுப்பு நிற ஜீப்பில் அவரை ஏற்றிக்கொண்டு, முகத்தை கறுப்பு நிற பையால் மூடி, வீட்டுக்கு அழைத் துச் சென்று அவரை அடித்து விசாரித்ததுடன், சூடேற்றப்பட்ட இரும்பு கம்பியால் சூடுவைத்தும் தாக்கியுள்ளனர். அவரிடம் உள்ள சர்ச்சைக்குரிய தகவல்களைக் கொண்ட தரவு அட் டையைக் கோரி சித்திரவதை செய் யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப் படுகிறது. அவரது வீட்டிலிருந்த இரு 'பென் டிரைவ்'கள் மற்றும் குறித்த தரவு அட்டையைப் பெற்றுக் கொண்ட பின்னர் வெல்லம்பிட்டி பகுதியில் அவர் விடுவிக்கப்பட்டார் என கூறப்பட்டுகின்றது.

தற்போது அவருக்குச் சொந்தமான வார இதழ் பதிப்பகத்தில் கடமை புரி யும் சுஜீவ கமகே, மேலும் வேறு சில வெளியீடுகள் தொடர்பில் சுயாதீன ஊடகவியலாளராக கடமையாற்றி யுள்ளார். அவரிடம் காணப்பட்ட சர்ச்சைக்குரிய தரவு அட்டை குறித்து விசாரிப்பதற்கு அவசிய மிருந்தால் சட்டரீதியான நடவடிக் கையில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு ஈடுபடாமையா னது குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் சந்தேகத்தை தோற்றுவித் துள்ளது.

இது தொடர்பில் விசாரணை நடத்தி, என்ன காரணத்துக்காக இக்கடத் தல் சம்பவம் நடைபெற்றது? யாரால் கடத்தல் நடத்தப்பட்டது? போன்ற தகவல்களை வெளியிடுமாறு பொலிஸ்மா அதிபரிடம், சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுக்கொள்ளு வதுடன், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் தொடர்பில் தகுந்த கவனம் செலுத் துமாறும் வலியுறுத்துகின்றது, என்றுள்ளது. (ஓ)

# ஜெனிவாவில் இலங்கையை இந்தியா ஆதரிக்கும்

## வெளிவிவகார செயலர் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 19

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்தியா, இலங் கையை ஆதரிக்கும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரி வித்தார்.

பிராந்தியத்தின் இறையாண்மையை பாதுகாக்கும் வகையில் இந்தியா இலங்கைக்கான ஆதரவை உறு திப்படுத்தியுள்ளது என்று ஜயநாத் கொலம்பகே தெரி வித்துள்ளார் என்று இலங்கையின் தேசிய அபிவிருத்தி தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் ருவிற்றர் பக் கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வல்லரசாக இருக்கும் இந்தியாவை, ஜயநாத் கொலம் பகே பெரிதும் பாராட்டியுள்ளார் எனவும் தேசிய அபிவி ருத்தி தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித் துள்ளது. (ஓ,22)




# காணாமல் ஆக்கப்பட்டோரின் விவரங்களை வழங்காதீர்கள்

## உறவுகள் எச்சரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 19

பொது அமைப்பு ஒன்று கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களுடைய விவ ரங் களைத் திரட்டி வருகிறது. எனவே அவ்வாறு வருவோ ருக்கு விவரங்களை வழங்க வேண்டாம் என்று வலிந்து காணாமல் ஆக்கபட்டோருடைய உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: மன்னார் மாவட்டத்தில் இயங்கும் பொது அமைப்பு ஒன்று மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இவ்வாறு விபரங்களைத் திரட்டி ஒரு புத்தகம் வெளி யிட்டது. விடுதலைப்புலி களால் கைது செய்யப்பட்டவர் களே காணாமல் போயுள்ளனர் என்று அதில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ள முடி யாது. நிவாரங்களைத் தருகிறோம், உங்களின் விப ரங்களை ஜெனிவாவுக்கு அனுப்ப உள்ளோம் என்று தெரிவித்தே அவர்கள் வீடுவீடாகச் சென்று விபரங் களைத் திரட்டி வருகின்றனர். அவர்களுக்கு எதுவித மான விபரங்களையும் எமது உறவுகள் வழங்கக் கூடாது. கண்டாவளை மற்றும் பாரதிபுரம் பகுதிகளில் அவர்கள் விபரங்களைச் சேகரித்துள்ளனர். எமது உறவுகளிடம் அவர்கள் விபரங்களுக்காக வரும் போது எமது சங்கத் தலைவர்களுக்கு அது தொடர்பில் தெரியப்படுத்துங்கள்- என்றனர். (ஐ-6)

# பாரம்பரிய உணவகம் கொழும்பில் திறப்பு

கொழும்பு, மார்ச் 19

இலங்கைக்கே உரித்தான உள்நாட்டு மற்றும் பாரம்பரிய உணவுகளை குறைந்த விலைக்குப்பெற்றுக்கொள்ளக் கூடிய உணவக மொன்று கொழும்பு கொள்ளுப்பிட்டியில் திறக்கப்பட்டுள்ளது.

சித்துள் மற்றும் பால் உற்பத்தியாளர் களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இயற்கையான கித்துள் பாணி மற்றும் பால் உற்பத்திகள் இங்கு விற்பனை செய் யப்படுகின்றன.

இந்த உணவகம் நாளாந்தம் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை உணவு விநியோக நடவடிக்கைகளுக்காகத் திறக் கப்பட்டிருக்கும். உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுப் பயணிகள் ஆர்வத்துடன் இந்த உணவகத்துக்குச் செல்வதைக் காண முடிகிறது. (க-இ)

# வேலைநிறுத்தம் முடிவு: ரயில் சேவைகள் வழமை

கொழும்பு, மார்ச் 19

ரயில் சாரதிகள் மற்றும் கட்டுப் பாட்டாளர்கள் 24 மணித்தியால அடையாள வேலைநிறுத்தத் தில் ஈடுபட்ட நிலையில், தற் போது போராட்டத்தைக் கைவிட் டுள்ளனர். ரயில்வே தொழிற்சங் கங்கள் மற்றும் போக்குவரத்து அமைச்சருக்கிடையில் நேற்று முற்பகல் பேச்சுவார்த்தை நடை பெற்றது. இதையடுத்து தமது வேலைநிறுத்தத்தைக் கைவிடு கின்றோம் என்று தொழிற்சங் கங்கள் அறிவித்துள்ளன.

ரயில் சாரதிகள் உள்ளிட்ட ரயில்வே தொழிற்சங்கங்கள் கடந்த புதன்கிழமை நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக் கைகளில் ஈடுபட்டன. இதனால் வடக்கு உட்பட நாட்டின் பல பாகங்களுக்குமான ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டன.

ரயில் சேவையில் ஈடுபடும் போது ஏற்படுகின்ற தவறுகளின் நட்டத்தை ரயில் ஊழியர்களிட மிருந்து அறவிடுகின்றமை, அசாதாரணமாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள் ளுதல் உள்ளிட்ட விடயங்க ளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்த வேலைநிறுத்தம் முன்னெ டுக்கப்படுகின்றது என்று தொழிற் சங்கங்கள் அறிவித்திருந்தன. இந்த நிலையில் வடக்கு மார்க்க ரயில் சேவைகளும் இடம்பெற வில்லை. (சு-22,25)

# 3000 மெ.தொன் அரிசி அரசின் கையிருப்பில்

## மக்களுக்கு விநியோகிக்கத் திட்டம்

கொழும்பு, மார்ச் 19

இலங்கை சுங்கத் திணைக்க எத்தால் கைப்பற்றப்பட்ட சுமார் 3 ஆயிரம் மெற் றிக் தொன் அரிசியை, சதொச ஊடாக பொதுமக்களுக்கு விநியோகிக்கத் திட் மிடப்பட்டுள் ளது.

பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செய லணியின் தலைவர் பசில் ராஜபக்சவின் வேண்டுகோளுக்கு இணங்க, நிதிய மைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டி கல அதற்கு ஒப்புதலளித்துள்ளார்.

இது தொடர்பாக தேவையான நடவடிக் கைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச, சுங்கத் திணைக்க ளப் பணிப்பாளர் நாயகம் ஜி.வி.ரவிப்ரி யவுக்கு அறிவுறுத்தினார்.

தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் சந்தை வாய்ப்புத் தொடர்பில் இடம்பெற்ற மறு ஆய்வு கலந்துரையா டலில் இந்தத் திட்டம் முன்வைக் கப்பட் டது. அத்துடன் நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான அரிசிப் பங்கு களை சந்தைக்கு விடுவித்தல் மற்றும் மேலும் 25 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை உள்ளூர் வியாபாரிகளிடமி ருந்து கொள்வனவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் கவனம் செலுத் தப்பட்டது.

நாட்டில் அரிசித் தட்டுப்பாடு இல்லை. உள்ளூர் நுகர்வுக்குப் போதுமான அரிசி நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள் ளது என்று பசில் ராஜபக்ச தெரிவித்தார். புத்தாண்டுக் காலத்தில் காய்கறி விலை குறையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அதேவேளை எதிர்காலத்தில் சதொச ஊடாக தேங்காய்களை மலிவான விலையில் விற்பனை செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் அருந் திக்க பெர்னாண்டோ தெரிவித்தார் என்று பிரதமரின் ஊடகப்பிரிவின் அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இன்றைய நாள்

**மேடம்:** உடல்நலனில் கவனம் தேவை. தந்தை உதவி செய்வார். குடும்பத்தோடு ஆன்மிக தலத்துக்குச் சுற்றுலா செல்வீர்கள். வியாபாரிகளின் பொருளாதார நிலை உயரும்.

**இடபம்:** பிரியமானவர்களுக்காக விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். வயதானவர்களால் ஏற்பட்ட மருத்துவச் செலவு குறையும். காதலர்களுக்கு உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** சிறிய முயற்சியின் பேரில் பதவி உயர்வு கிடைக்கக்கூடும். வியாபாரிகள் அரசு சம்பந்தப்பட்ட விடயத்தில் நன்மை பெறுவர். சமூகத்தில் நடைபெறும் பிரச்சினையை தட்டிக் கேட்பீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத திருப்பங்களால் மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தில் இருந்த சிறு சிறு சச்சரவுகள் நீங்கும். மனைவியின் உடல்நலனில் அக்கறை கூடுவதால் நன்மை வரும்.

**சிம்மம்:** பழைய தொடர்பு புதுப்பிக்கப்படும். நன்றி உணர்ச்சி அதிகரிக்கும். உங்களை அடையாளப்படுத்திக் கொள்வீர்கள். தலைமைப் பதவி வரும். சாதனை செய்ய முயற்சி செய்வீர்கள்.

**கன்னி:** எதிர்பாராத சந்தோஷமான திருப்பங்கள் இன்று நிகழும். பழித்துப் பேசுவதன் விளைவை அனுபவித்து சிரமப்படக்கூடும். வாழ்வில் முன்னேறுவதற்குத் தவறான வழி வேண்டாம்.

**துலாம்:** பணியிடத்தில் மிகுந்த கவனத்துடன் வேலை செய்யுங்கள். பயணத்தின் மூலம் முக்கியமான விருப்பம் நிறைவேறும். புதிய பொருட்கள், நகைகளின் சேர்க்கை நிகழும்.

**விருச்சிகம்:** நெருங்கிய உறவினரால் ஏற்பட்ட வருத்தங்கள் மறையக்கூடும். முன்பு தடைபட்ட திருமணம் இப்போது கைகூடி மகிழ்ச்சி தரும். குடும்பத்தில் சந்தோஷம் நீடிக்கும்.

**தனுசு:** பழைய கடனை அடைப்பீர்கள். நண்பர்களுக்கு உதவுவீர்கள். பணியில் சிறப்பீர்கள். புதிய பொறுப்புகளை ஏற்க வேண்டி வரும். இத்தனை காலம் தள்ளிப்போட்டதை தைரியமாக முடிப்பீர்கள்.

**மகரம்:** கடன் காரணமாக உறவினர் போக்கில் மாறுதல் வரும். திருமணம் தொடர்பான விஷயத்தில் தாமதம் ஏற்படலாம். அக்கம் பக்கத்தினருடன் இருந்த மனஸ்தாபம் நீங்கும்.

**கும்பம்:** குடும்ப ஒற்றுமை காரணமாக எதிரிகள் தொலைவர். இடமாற்றத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும். கலகத்தால் நியாயம் வரும். சொத்து வாங்குவது பற்றிய பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள்.

**மீனம்:** தாய்வழி உறவினர்களுடன் இருந்த சச்சரவு நீங்கும். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். செய்யும் முயற்சியால் சிறிதளவே முன்னேறும் நாள்.

## தவக்கால சிந்தனை

### அன்பு அனைத்தையும் சாதிக்கும்

அழுக்கான உடையும், அருவருப்பான தோற்றமும் உடைய இரப்போன் ஒருவன் பாதையோரம் அமர்ந்திருந்து அவ்வழியால் செல்வோரிடம் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். பயணிகள் அவனை ஏறெடுத்தும் பாராது எட்ட நின்று பணத்தை வீசிவிட்டுச் சென்று கொண்டிருந்தார்கள்.

அப்போது ஆன்மிகவாதியொருவர் அவனுக்குப் பணம் கொடுக்க சட்டைப் பைக்குள் கையைவிட்டார். பணமேதும் இருக்கவில்லை. உடனே இரப்போனின் அருகே சென்று அவனது கையைப் பிடித்து 'சகோதரா இன்று என்னிடம் பணம் தீர்ந்துவிட்டது. நாளை தருகிறேன் கவலைப்படாதே" என்றார். அவனோ "ஐயா, நீர் எல்லோரையும் விட பெறுமதியானதை எனக்குத் தந்துள்ளீர். எவரும் என்னை ஒரு பொருட்டாக எண்ணாத வேளையில் என்னை உமது சகோதரனாக்கி அன்பையும் ஆறுதலையும் தந்துள்ளீர். கடவுள் வடிவில் நீர் எனக்கு நம்பிக்கை ஊட்டியுள்ளீர்"என்றான்.

பணத்தாலும் பட்டம் பதவியாலும் சாதிக்க முடியாததை அன்பின் தொடுகையால் போதித்து சாதனையாக்க முடியும். அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கின்றார். கைவிடப்பட்டோருக்கு கலங்கரை விளக்காவோம். துன்புறுவோருக்கு துயர் துடைக்கும் அன்புக் கரங்களாவோம். தனிமையிலுள்ளோருக்கும் நல் உறவுகளாவோம். சிறைப்பட்டோருக்கு விடுதலைக் குரலாவோம். அடிமைகளுக்கு உரிமைகளை உரித்தாக்குவோம். பசித்தோருக்கு புசிக்கக்கொடுப்போம். இதுவே அவர்களும் நாமும் இறைவனைச் சந்திக்கும் இனிய களமாகும்.

**எஸ்.யேசுதாஸ்,**
கொழும்புத்துறை

# இம்ரான்கானின் திட்டங்கள் விரைவில் நடைமுறைக்கு

## இருநாட்டுப் பிரதிநிதிகளும் சந்திப்பு

கொழும்பு,மார்ச் 19

இலங்கைக்கு வருகை தந்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானால் உறுதியளிக்கப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, இருநாடுகளின் பிரதிநிதிகளும் சந்தித்துக் கலந்துரையாடினர். வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் முஹம்மத் சாத் கட்டாக் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு தூதரகத்தில் இடம்பெற்றது.

இலங்கையில் நடமாடும் நூலகங்களை அமைத்தல், மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல் உள்ளிட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அறிவித்திருந்தார். அவற்றை விரைவாகச் செயற்படுத்துவதற்கு இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

இலங்கையர்களுக்காக பௌத்த யாத்திரீக இடங்களைத்திறப்பதற்கு பாகிஸ்தான் வழங்கும் சலுகையை அமைச்சர் வரவேற்றார். பௌத்த பிக்குகள், ஊடகவியலாளர்கள் மற்றும் கல்வியியலாளர் போன்றோரை பாகிஸ்தானுக்கு வருகை தருமாறு தூதுவர் அழைப்பு விடுத்தார். எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் பாகிஸ்தான் தேசிய தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அமைச்சர் குணவர்தனவுக்கு தூதுவர் அழைப்பு விடுத்தார். (க-இ)

# தடுப்பூசி இறக்குமதி: தனியாரும் அவசியம்

கொழும்பு,மார்ச் 19

கொவிட்19 தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதற்கு, தனியார் துறையினருக்கு அனுமதி வழங்குவதில், எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எனினும் இதனை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் முழுமையாகக் கண்காணிக்க வேண்டும்

இவ்வாறு இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண வலியுறுத்தியுள்ளார்.

தற்போது தொழிற்சாலைகள் மற்றும் பிற பணியிடங்களிலிருந்து அதிகளவான கொவிட்19 நோயாளர்கள் கண்டறியப்பட்டு வருகின்றனர். அத்தகைய இடங்களில் தடுப்பூசிகளின் பயன்பாட்டை அதிகரிக்க தனியார் துறையினரை நாடுவது சிறந்த பொறிமுறை என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# கொரோனா அறிவுறுத்தல் தனிச்சிங்களத்தில் மட்டும்

கொழும்பு,மார்ச் 19

கொவிட்19 வைரஸ் தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல் கடிதங்கள் தனிச் சிங்கள மொழியில் மாத்திரம் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதனால் அவற்றில் உள்ள விடயங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று தமிழ்மொழியை பிரதான மொழியாகக் கொண்டு கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் தென் மாகாண பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

வழங்கப்படும் அறிவுறுத்தல்களை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் தெளிவுபடுத்துவதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்று அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனால் தமிழ்மொழியையும் உள்ளடக்கிய அறிவுறுத்தல்களை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-இ)

# ஆசிரியர்களின் வருகை இரு நாள்கள் கட்டாயம்

## மேல் மாகாண பாடசாலைகளுக்கு அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 19

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் தரம் 5,11,13 ஆம் வகுப்புகளின் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்களைத் தவிர்த்து , ஏனைய ஆசிரியர்கள் வாரத்தில் இரண்டு நாள்கள் கட்டாயம் பாடசாலைகளுக்கு வருகைத்தர வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் , மேல் மாகாணத்தில் தரம் 5,11,13 ஆம் வகுப்புகளுக்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை நாட்டின் ஏனைய மாகாணங்களில் சகல வகுப்புகளிலும் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் கல்விசாரா ஊழியர்கள் தினமும் தமது கடமை செய்யும் பாடசாலைக்கு வருகைத்தர வேண்டும். தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (க-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தீர்மானங்களும், விசாரணைகளும்!

நேற்றுமுன்தினம் நல்லூரில் தமிழ் மக்கள் பெருமளவில் ஒன்றிணைந்து மேற்கொண்ட எழுச்சிப் பேரணியின் முடிவில் தீர்க்கமானதாகவும், தெளிவாகவும் சர்வதேசத்துக்கு ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கிறது.

மிகவும் நெருக்கடியான இந்தக் கால கட்டத்தில் பட்டறிவு அனுபவத்தின் அடிப்படையில், அரசியல் தலைமைகளைப் பின்நிறுத்தி மக்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த இந்தப் பேரணி விடுத்துள்ள செய்தி, மிகவும் அர்த்தம் கொண்டதாகவே உள்ளது. இது அரசியல்வாதிகளின் மரபுசார் சம்பிரதாய அறிவிப்புக் குரலாக அல்லாமல், மக்களின் உணர்வுடன் கூடிய ஓர்மம் சார் போராட்டக் குரலாக ஒலித்திருப்பது சர்வதேச ரீதியில் ஓரளவுக்கேனும் அதிர்வுகளை உண்டுபண்ணும்.

இலங்கையின் ஆட்சிப் பீடத்தில் இருந்து அதிகாரம் செய்வோர் சிங்கள - பௌத்த மேலாதிக்கச் சிந்தனைகொண்டு, பல தசாப்த காலமாக சிறுபான்மை தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ந்தும் இன அழிப்பு நடவடிக்கைகளிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டே வருகின்றனர். அத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் மக்கள் தமக்கான நீதிகோரலை சர்வதேச மயப்படுத்த முனைந்ததன் பிரதிபலிப்பே இன்றைய போராட்டங்கள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், கண்டனங்கள், அறிக்கைகள், மற்றும் மனுக் கையளிப்பு நகர்வுகள் அனைத்துமாகும்.

நல்லூர் பேரணியின் முடிவில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தமுறை இலங்கை விவகாரம் தொடர்பாக நிறைவேற்றப்படவுள்ளது என்று கூறப்படும் 46/1 என்ற ஜெனிவாத் தீர்மானத்தை முழுமையாக நிராகரிக்கின்றோம் என்ற செய்தி உலகுக்கு தெளிவாக உணர்த்தப்பட்டிருக்கிறது. இங்கேதான் ஒரு சிக்கலான யதார்த்தம் இருக்கின்றது. அதாவது இலங்கை அரசும் தனக்கு எதிராக முன்வைக்கும் தீர்மானத்தை முற்றாக நிராகரிக்கின்றது. தமிழ் மக்களும் நிராகரிக்கின்றனர். இந்தநிலை அசாதாரணமான குழப்பத்தை ஏற்படுத்தவே செய்யும். எனினும், இந்தப் பிரேரணை அதன் மீதான வாக்கெடுப்புக்குப் பின்னர்தான் எவ்வாறு அடுத்த கட்டத்தை நோக்கி அது நகரும் என்பதைக் கூறமுடியும்.

இரு தரப்பினராலும் நிராகரிக்கப்படும் ஒரு பிரேரணை, இரு தரப்பினரையும் சமாளிக்கும் உள்நோக்கத்தைக் கொண்டதாக இருக்கும் என்பது தானே உண்மை.

தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது விசாரணை, நீதி மற்றும் நியாயமான தீர்வு என்ற அணுகுமுறைகளையே. எனவேதான் அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைக்கும் அப்பால், சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையைக் கோரி நிற்கின்றனர். இது நியாயமானதுதானே. இலங்கையைக் காட்டிக்கொடுக்காதீர் என ராஜபக்ச அரசு விடுத்துவரும் கோரிக்கையே, "குற்றவாளிகள் யார்? தண்டனைக்கு பயப்படு கின்றவர்கள் யார்?" என்பதை இனங்காட்டுகின்றதல்லவா?

# முல்லையில் சட்டவிரோத மீன்பிடி; எதிர்த்துப் போராட மீனவர் தயார்

### சமாசம் அதிரடி அறிவிப்பு

**முல்லைத்தீவு, மார்ச் 19**

**"முல்லைத்தீவுக் கடற்பரப்பில் வெளிமாவட்ட மீனவர்களால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தத் தவறினால் மீனவர்களை ஒன்றுதிரட்டி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு முன்னால் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்போம்" என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்றிக் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சமாசத்தில் மூன்று நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்துள்ள சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தேவையான உரிய நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற மூன்று முக்கிய அதிகாரிகளை இடமாற்றம் செய்து புதியவர்களை நியமித்து முல்லைத்தீவில் நடைபெறுகின்ற சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்தும்படி கடற்றொழில் அமைச்சருக்கு தெரிவித்துள்ளோம்.

வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல் மற்றும் சுருக்கு வலை பயன்படுத்துதல் ஆகியவை உள்ளிட்ட அனைத்து சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்த வேண்டியது மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளின் பொறுப்பாகும். சமாசத்துடன் ஒத்துழைக்காத அதிகாரிகள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்களுக்கு துணை போகின்றார்கள் என்பதுதான் சமாசத்தின் நிலைப்பாடாகும்.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தாவிட்டால், முல்லைத்தீவு பகுதியின் கடற்றொழிலாளர்கள் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு முன்னால் படகுகள், மீன்பிடி உபகரணங்களுடன் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்போம் -என்றார்.

ஏற்கனவே மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடிக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றிருந்த நிலையில் சமாசம் மீண்டும் அந்த அறிவிப்பை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-13)

# பெண்களை இலக்குவைத்து வடக்கில் நிதி மோசடி

### எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்து

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தையல் தொழிலில் ஈடுபட்டு வரும் பெண்களை இலக்கு வைத்து கும்பல் ஒன்று நிதி மோசடிகளில் ஈடுபட்டு வருகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுமார் 2.3 மில்லியன் ரூபா பணம் அந்தப் பெண்களிடம் இருந்து மோசடி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்ட தொழில் நிறுவனமாகத் தம்மை அடையாளப்படுத்திய அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் கிளிநொச்சியில் அலுவலகம் ஒன்றை அமைத்து, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பின்தங்கிய கிராமங்களில் தையல் தொழிலில் ஈடுபடும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களிடம் சென்று தங்களுடை நிறுவனத்தில் அங்கத்தவராகச் சேருமாறு வலியுறுத்தியுள்ளனர்.

அங்கத்தவரானால் அதன் மூலம் தையல் ஒப்பந்தங்கள் கிடைக்கும் என்ற ஆசை வார்த்தைகளைக் கூறியுள்ளனர்.

இதனால் பல பெண்கள் அந்த நிறுவனத்தில் அங்கத்தவராகியுள்ளனர். அதன்பின்னர் அந்தப் பெண்களிடம் தையல் ஒப்பந்தத்துக்கு முற்பணம் என்று கூறி ஒரு தொகைப் பணத்தை அறவிட்டுள்ளனர்.

இவ்வாறு சுமார் 23 லட்சம் ரூபா வரை பணம் பெறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. சுமார் மூன்று மாதங்களின் பின்னர் அந்த நிறுவத்தின் அலுவலகம் மூடப்பட்டு விட்டது.

அந்த நபர்களின் அலைபேசிகள் செயலிழந்துள்ளன. பணத்தைப் பறிகொடுத்து பல பெண்கள் நிர்க்கதியான நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. '

இது தொடர்பில் கிளிநொச்சி, மற்றும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ஐ-12)



## ஒப்பந்த ஊழியர்கள் கவனவீர்ப்பு பேராட்டம்

கிளிநொச்சி, மார்ச் 19

கரைச்சிப் பிரதேச சபையில் காணப்படும் நீண்டகால ஆளணிப் பற்றாக்குறைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படாமையைக் கண்டித்து அங்கு தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவோரால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஆட்சேர்ப்புக்கான நேர்முகத் தேர்வுகளை உடனடியாக நடத்திப் பணியாளர்களைத் தெரிவுசெய்யுமாறும் அதன் போது தற்காலிக நியமனத்தில் பணிபுரிவோருக்கு முன்னுரிமை வழங்கக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்காது ஒரு லட்சம் வேலை வாய்ப்பின் ஊடாக அரசியல் தலையீட்டுடன் புதியவர்களை இணைக்க முயற்சி இடம்பெறுகிறது என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதேவேளை நகரத் துப்பரவுப் பணிக்காக நிரந்தரப் பணியாளர்கள் வாகனங்களைக் கொண்டு செல்ல முற்பட்ட போது அவற்றைத் தடுத்து மறியல் பேராட்டத்தையும் போராட்டக்காரர்கள் முன்னெடுத்தனர். (வ-6.12.113)

# ரூபா 11,055 மில். செலவில் முல்லையில் அபிவிருத்தி

## மாவட்டச் செயலர் தகவல்

**முல்லைத்தீவு, மார்ச் 19**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தியில், தற்போது 11 ஆயிரத்து 55 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்று மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது. முல்லைத்தீவின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 2019 ஆம் ஆண்டு அநேகமான நிதிகள் கிடைக்கப்பெற்று ரி.எப்.ஆர் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் 83.4 மில்லியன் ரூபா நிதி கிடைக்கவேண்டியுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் நூறு வீதமான வேலைத்திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் சௌபாக்கியா உற்பத்திக் கிராமம், விளையாட்டு மைதானத்துக்கான புனரமைப்பு, ஆயிரம் கிலோமீற்றர் பாதை புனரமைப்பு, பெருவீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன புனமைப்பு, தேசிய நீர்வளங்கள் அதிகாரசபை நிதி ஒதுக்கீடு மற்றும் மாகாணசபையின் நிதி ஒதுக்கீடு ஊடான புனரமைப்புப் பணிகள் 11 ஆயிரத்து 55 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிதி ஒதுக்கீட்டின் புனரமைப்பில் சியாப் திட்டம், விவசாய மறுசீரமைப்புத் திட்டம் மற்றும் சௌபாக்கியா நீர்பாசனச் செழிப்புத் திட்டம் என்பவை உள்வாங்கப்படவில்லை. இந்த அபிவிருத்திகளுக்கான மதிப்பீடுகள் கிடைக்காத காரணத்தாலேயே இவை உள்வாங்கப்படவில்லை- என்றார். (ற-19)



# கால்கோள் விழா

கொடிகாமம், மார்ச் 19

பளை இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் ஒன்றுக்கான மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா அதிபர் க.ஞானசீலன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில் பளை கோட்டக் கல்வி அலுவலர் தி.திலீபன் கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் சு.சிவபாலன் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர். (வ-159)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், மார்ச் 19

இருபாலை வேளாதோப்பு ஸ்ரீமதுரை மகா முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் நாளைமறுதினம் காலை 9.30 மணிக்கு ஆலய வீதியிலுள்ள இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தக் கூட்டத்தில் திருவிழா உபயகாரர்கள், மற்றும் பக்தர்கள் அனைவரையும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு நிர்வாக சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ற-இ)



# பாடசாலை மாணவர்கள் ஐவருக்கு சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த 5 மாணவர்களுக்கு சைக்கிள்கள் நேற்று வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் சிவப்பிரகாசம் காராப்பிள்ளையின் நினைவு தினத்தை முன்னிட்டு இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு பாரதி மகா வித்தியாலய மாணவர்கள் இருவர், முல்லைத்தீவு வள்ளிபுனம் மகா வித்தியாலய மாணவர்கள் இருவர் மற்றும் முல்லைத்தீவு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவர் ஒருவர் ஆகியோருக்கே இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ற-222)

# பஸ்-ரயில் விபத்து; இருவர் தொடர்ந்தும் சிகிச்சையில்

மன்னாரில் இடம்பெற்ற ரயில் விபத்தில் காயமடைந்தவர்களில் இருவர் தொடர்ந்தும் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார். மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னாரில் கடந்த செவ்வாய்க்கிழமை ரயிலுடன் பஸ் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு. இருவர் தொடர்ந்தும் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் படிப்படியாக சிகிச்சை பெற்று வீடு திரும்பி வருகின்றனர். இதேவேளை மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேலும் 4 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் கடற்படை வீரர். இவர் கேகாலை மாவட்டத்தில் இருந்து விடுமுறை முடிவடைந்த நிலையில் கடமைக்கு திரும்பி இருந்தார். ஏனைய இருவர் பேசாலை மற்றும் ஆக்காட்டி வெளி பகுதிகளில் ஏற்கனவே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் உறவினர்களாக காணப்படுகின்றனர்.

மேலும் ஒருவர் சின்ன வலயன் கட்டு பகுதியில் புதிதாக ஆசிரிய பணியை மேற்கொள்ள இணைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த நான்கு தொற்றாளர்களும் நேற்று வியாழக்கிழமை சிகிச்சை மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். -என்றார். (ஐ-56)



# குடியேறி வாழ்வோருக்கு நீண்டகாலக் குத்தகை உறுதி

கொடிகாமம், மார்ச் 19

கொடிகாமம் மத்தி ஜே, 327 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மடாலய சபைக்குச் சொந்தமான காணியில் 1990ஆம் ஆண்டிலிருந்து குடியேறி வாழும் 11 குடும்பங்களுக்கு நீண்ட குத்தகை உடன்படிக்கை உறுதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் அ.திருநாவுக்கரசு தலைமையில் கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பத்திரம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (வ-159)

# வாதரவத்தை கிராமத்துக்கான போக்குவரத்தை ஆரம்பிக்க பணிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 19

வாதரவத்தை கிராமத்துக்கான பொதுப் போக்குவரத்து சேவையை உடன் ஆரம்பிக்குமாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கருத்துத் தெரிவிக்கையில், போருக்கு முன்னர் கிராமங்கள் பலவற்றில் இடம்பெற்ற சேவைகளை இலங்கை போக்குவரத்துச் சபை நிறுத்தியுள்ளது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களை நோக்கி அரசின் பொதுப்போக்குவரத்துச் சேவைகள் சீராக இடம்பெறவேண்டும். அச்செழு கிராமத்துக்கான போக்குவரத்து சேவைகளும் இடம்பெறுவதில்லை.

எனவே நிறுத்தப்பட்டுள்ள சேவைகள் தொடர்பில் ஆராய்ந்து மீளவும் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். வாதரவத்தைக்கான சேவை முன்னுரிமை அடிப்படையில் அவசியமாகவுள்ளது என்றார்.

இதனையடுத்து போக்குவரத்துச் சபை அதிகாரிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்த அமைச்சர், வாதரவத்தைக்கான போக்குவரத்துச் சேவையை தாமதமின்றி ஒழுங்குபடுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (ஐ)

# 31ஆம் நாள் நினைவுதின அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 18.02.2021 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத்தெய்வம்

## அமரர் ஆழ்வார் சரஸ்வதி

அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் மற்றும் அனுதாபச் செய்திகளைப் பல வழிகளிலும் பரிமாறிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.03.2021) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மகள்மார்:
ர.மல்லிகாதேவி,
க. சுசீலாதேவி
மற்றும் குடும்பத்தினர்.

வரணி வடக்கு,
மாசேரி.


# ராஜபக்ச அரசை தோற்கடிப்போம்

## ஐக்கிய மக்கள் சக்தி உறுதி

கொழும்பு,மார்ச் 19

தற்போதைய ராஜபக்ச அரசைத் தோற்கடித்து, மக்களுக்கான ஆட்சியை அமைத்து, அவர்களால் வீழ்ச்சி கண்ட பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதே எமது இலக்கு.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனா வைரஸ் பரவல் காரணமாகவே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று அனைவரும் நினைக்கின்றனர். ஆனால் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட போது, நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி காணப்படவில்லை. அப்போதும் பொருளாதாரம் நெருக்கடி நிலையிலேயே இருந்தது.

எமது ஆட்சியின் போது வெளிநாடுகளிடம் பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். எனினும் தற்போதைய அரசு கடன்களை மீளச்செலுத்துவதற்குக்கூட கடன் பெறமுடியாத நிலையிலுள்ளது.

கோத்தாபய ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்சவின் பிள்ளைகள் லொஸ் ஏஞ்சல்ஸில் வாழ்கிறார்கள். ஆனால் எமது பிள்ளைகள் இந்த நாட்டிலேயே வாழவேண்டும். அவர்கள் சுவாசிப்பதற்கு சுத்தமான காற்று வேண்டும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நியாயமான விடயங்கள் தொடர்பில் பேசுகின்ற எம்மைச் சிறையில் அடைப்பதன் மூலமோ அல்லது அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணை ஆணைக் குழுவின் மூலமோ அடக்க முடியும் என்று நினைக்கின்றனர்.

ஆனால் ராஜபக்சக்கள் எமக்காகத் தயாரிக்கின்ற தூக்குக்கயிற்றை மிகவும் வலுவாகத் தயாரிக்க வேண்டும். ஏனென்றால் எதிர்வரும் காலத்தில் அந்தக் கயிற்றுக்கு அவர்களே பலியாகப்போகின்றனர். - என்றார். (க-இ)


# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை

## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) 2021

1. யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ்க் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் முதல்வர்/ ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468, 021 2222019) என்னும் முகவரியிலிருந்து 22.03.2021 திகதியில் இருந்து 05.04.2021ஆம் திகதி வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை, பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பிராந்தியப் பெறுகைகள் குழு, மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 06.04.2021 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வியின் வெளியுறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலை விபரம் குறிப்பிடப்படல்வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்வி செல்லுபடியாகும் காலமானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
8. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
9. கேள்வி தொடர்பான முன்னோடிக் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 25.03.2021ஆம்திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | நிதி | கேள்வி செல்லுபடியாகும் | | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | | | பாதுகாப்புப் பிணைதொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | JMC/WD/ PSDG(Bu) /2021-09 | Improvement of Pillaikaniyamutham Pre School | 1.325 | PSDG | 49 | 25.05.2021 | 2 | C8 & C9 | 14,000.00 | 22.06.2021 |
| 2 | JMC/WD/ PSDG(Bu) /2021-10 | Construction of roof work with necessary pillar on existing concrete floor at Kakaithivu Recycling centre | 5.465 | PSDG | 77 | 22.06.2021 | 3 | C7 & C6 | 55,000.00 | 20.07.2021 |
| 3 | JMC/WD/ PSDG(Bu)/ 2021- 11 | Construction of shed for Kondavil Pump house | 1.501 | PSDG | 49 | 25.05.2021 | 2 | C8 & C9 | 16,000.00 | 22.06.2021 |
| 4 | JMC/WD/ PSDG(Bu)/ 2021- 12 | Construction of fence for Thirunelvely pump house | 1.754 | PSDG | 49 | 25.05.2021 | 2 | C8 & C9 | 18,000.00 | 22.06.2021 |

தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
18.03.2021


# விமல் வீரவன்சவுக்கு இடைக்காலத் தடை

கொழும்பு,மார்ச் 19

கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் மூன்று இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்கு கொழும்பு மாவட்ட நீதிவான் நீதிமன்றால் கடந்த செவ்வாய்க்கிழமை இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு அபகீர்த்தி ஏற்படும் விதத்தில், பொய்யான மற்றும் வெறுக்கத்தக்க கருத்துக்களை வெளியிடுவதைத் தடுத்து இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ரிஷாத் பதியுதீன் சார்பில் முன்வைக்கப்பட்ட மனுவை ஆராய்ந்த கொழும்பு மாவட்ட நீதிவான் அருண அளுத்கே, தடை உத்தரவை பிறப்பித்ததுடன், எதிர்வரும் 31 ஆம் திகதி மனுவின் பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் உத்தரவிட்டார்.

ஒரு பில்லியன் ரூபா நஷ்ட ஈடு கோரி, விமல் வீரவன்ச மற்றும் மூன்று இலத்திரனியல் ஊடகங்களுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மான நஷ்ட ஈடு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (க-இ)

# தான்சானியா அதிபர் ஜான் மகுபலி சாவு!

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான தான்சானியா வின் அதிபர் ஜோன் மகுபலி நேற்றுமுன்தினம் காலமானார். அவருக்கு வயது 61. மகுபலி கடந்த 2 வாரங்களுக்கும் மேலாக பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருந்தார். கடந்த 12ஆம் திகதி மகுபலி உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டார். அவரது இதயம் பலவீனமானது. எனினும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் உயிரிழந்தார். (ம)

# துணுக்காயில் 8 இடங்களில் குடிதண்ணீர் பற்றாக்குறை

## துணுக்காய் பிரதேச சபைத் தவிசாளர் சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, மார்ச் 19**

**முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் எட்டு கிராமங்களில் குடிதண்ணீர் பிரச்சினை காணப்படுகிறது என்று துணுக்காய் பிரதேச சபைத் தவிசாளர் அ.அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், அமதிபுரம் மற்றும் ஆரோக்கிய புரம் ஆகிய கிராமங்களில் குடி தண்ணீர் நெருக்கடி காணப்படுகின்றது.

பிரதேச சபையால் குடிதண்ணீர் வழங்கலுக்கு பயன்படுத்தப்படும் நான்கு உழவு இயந்திரங்களில் மூன்று உழவு இயந்திரங்கள் பழுதடைந்துள்ளன.

இரு உழவு இயந்திரங்கள் முற்றாகவே பயன்படுத்த முடியாத அளவுக்குப் பழுதடைந்துள்ளன.

ஒரு உழவு இயந்திரம்தான் தற்போது பணியில் உள்ளது. மாவட்ட் செயலகத்திடம் குடிதண்ணீர் விநியோகத்துக்கான வாகன வசதியை கேட்டுள்ளோம். உவர்ப் பரம்பலும் கிராமங்களில் குடிதண்ணீர் நெருக்கடிக்கான முதன்மைப் பிரச்சினையாக காணப்படுகின்றது - என்றார்.

இதேவேளை பழையமுறிகண்டி பகுதியில் குடிதண்ணீருக்கான சிறந்த கிணறு ஒன்று காணப்படுகிறது என்றும், அந்தக் கிணற்றை இறைத்து துப்புரவு செய்து தரும்படியும் அப் பகுதி பொது அமைப்புகளால் துணுக்காய் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்க ப்பட்டுள்ளது. (ஐ-13)

# யாழ்ப்பாணப் பல்கலையில் சர்வதேச மீள் சுழற்சி தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயனவியல் கழகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மீள் சுழற்சி தினம் நேற்று வியாழக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன், இரசாயனவியல் துறைத் தலைவர் கலாநிதி பூபாலசுந்தரம் ஐங்கரன், இரசாயனவியல் கழக மூத்த பொருளாளர் கலாநிதி சிவதர்ஷினி யோகி மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின்போது பி.ஈ.ரி வகைக் கழிவுகளை சேகரித்து மீள் சுழற்சி செய்வதற்கான பிரத்தியேகத் திறன்மிகு செயலி முறையில் அமைந்த சேகரிப்பான் ஒன்று கோகோகோலா ஸ்ரீ லங்கா மற்றும் Idea Facactory நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையில் அமைக்கப்பட்டது

இந்த சேகரிப்பானில் பொருத்தப்பட்ட செயலி மூலம் அதிக பி.ஈ.ரி நெகிழி சேகரித்த மாணவர்களுக்கு வெகுமதிகள் வழங்கி மீள்சுழற்சியை ஊக்குவிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ஐ-இ)



# கறுவாப்பட்டையில் ஆயுர்வேத சிகரெட்

## இலங்கையில் அறிமுகம்

கொழும்பு,மார்ச் 19

நூறு வீதம் கறுவாப்பட்டையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத சிகரெட் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ச, கொழும்பு கிங்ஸ்பேரி ஹோட்டலில் அதிகாரப்பூர்வமாக அதனை அறிமுகப்படுத்தினார்.

இது உள்ளூர் உற்பத்தித் துறையில் எதிர்காலத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று தொழில்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். (க-இ)

புகையிரதக் கடவைகளில்

# சமிக்ஞை விளக்குகள் பொருத்தத் தீர்மானம்

முல்லைத்தீவு, மார்ச் 19

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம், பனிக்கன்குளம் மற்றும் கிழவன்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள புகையிரதப் பாதுகாப்புக் கடவைகளில் சமிக்ஞை விளக்குகள் பொருத்துவதென கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதன்போது புதுக்குடியிருப்புப் பிரதேசசபையின் தவிசாளரிடம் இந்த மூன்று இடங்களிலும் பாதுகாப்புக் கடவைகள் உருவாக்கப்பட்டால் நியமிக்கப்படும் ஊழியருக்கு சம்பளம் வழங்க முடியுமா? என்று வினவிய போது பிரதேச சபையிடம் நிதி வளம் இல்லை எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், பிரதேச சபையிடம் நிதி வளம் இன்மையால் இந்தப் பணிகளை பிரதேச சபையால் மேற்கொள்ள முடியாதுள்ளது எனத் தெரிவித்துடன், நகரங்களில் பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை விளக்குகளைப் பொருத்துவதே பொருத்தமானது எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்த முடிவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முடிவாகவும் எட்டப்பட்டது. (ந-13)

# பல்கலைக்கழகங்களை திறக்கக்கோரி போராட்டம்

கொழும்பு,மார்ச் 19

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் மூடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களை, சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளுக்கு அமைவாக மீண்டும் திறக்குமாறு கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து மூடப்பட்ட பல்கலைக்கழகங்களை மீண்டும் திறப்பது தொடர்பில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது.

பல்கலைக்கழகங்களைத் திறப்பது தொடர்பில் சுகாதாரத் துறையினருடன் கலந்துரையாடப்படுகின்றது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (க-இ)

# கணபதிப்பிள்ளையின் இழப்பு கலையுலகுக்குப் பேரிழப்பு!

## இந்துமாமன்றம் இரங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 19

முதுபெரும் இசைத்துறை பேறிஞர், சு.கணபதிப்பிள்ளையின் இழப்பு, இசைத்துறைக்கு பேரிழப்பு என்று அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கவலை தெரிவித்தார்.

சங்கீத பூசணம் சு.கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் நேற்றுமுன்தினம் காலமானார்.

இது தொடர்பில் ஆறு.திருமுருகன் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இவர், ஈழநாட்டின் இசைத்துறை வளர்ச்சிக்கு சுமார் அறுபது ஆண்டுகளுக்கும் மேல் அயராது உழைத்த ஒப்பற்ற கலைஞர். இசை நுட்பங்களை நன்கு அறிந்த விற்பன்னர். இசைத்துறை பிரதிக் கல்விப் பணிப்பாளராக, இசைத்துறை பரீட்சகராக சிறந்த பணியாற்றியவர். வட இலங்கை சங்கீத சபையின் வளர்ச்சியிலும், இராமநாதன் நுண்கலைத்துறையின் வளர்ச்சியிலும் அயராது பங்காற்றியவர். இந்திய இசைக் கலைஞர்களுக்கு ஈடாக விளங்கிய இந்தப் பெருமகனாரின் இழப்பு எமது நாட்டின் கலை உலகுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. அன்னாரின் ஆத்மசாந்திக்காக அனைவரும் பிரார்த்திக்க வேண்டிய கடப்பாடுடையோம் - என்று குறிப்பிட்டுள்ளார். (த)

# குளத்தின் வெளிப்புறத்தில் அத்துமீறிய கட்டுமானம்

## உடனடியாக நிறுத்த வேண்டும் என அதைப் பாதுகாக்கும் அமைப்பு கோரிக்கை

வவுனியா, மார்ச் 19

வவுனியா குளத்தில் அனுமதியளிக்கப்பட்ட பிரதேசத்துக்கு அப்பால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் விடுத்த அறிவுறுத்தல் தொடர்பில் வவுனியா நகரசபை நடவடிக்கை எடுக்கவில்லை என குளத்தைப் பாதுகாக்கும் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில்நீர்ப்பாசனத்திணைக்களத்தால் நகரசபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா குளத்துக்குள் பொழுதுபோக்கு பூங்கா அமைக்க அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டதுக்கு மேலதிகமாக தற்போது மறைப்பு ஏற்படுத்தப்பட்டு புதிய கட்டுமானங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக நகரசபை தொழில்நுட்ப உத்தியோகத்தரும் எமது உத்தியோகத்தர்கள் சகிதம் வருகை தந்து உடனடியாக பணிகளை நிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டு கட்டுமான வேலைகள் நிறுத்தப்பட்டன. எனினும் நாம் குளத்துக்குச் சென்றபோது பெருமளவான வேலைகள் முடிவுற்றதுடன் தொடர்ந்தும் வேலைகள் நடைபெறுவதும் அவதானிக்கப்பட்டது.

மாவட்டச் செயலரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலும் எந்த மேலதிக கட்டுமானங்களும் வவுனியா குளத்துக்குள் அமைக்கப்பட்ட பூங்காவில் நிர்மாணிக்க அனுமதிப்பதில்லை என அனைத்துப் பங்குதாரர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் எம்மால் அனுமதிக்கப்பட்ட பகுதிக்கு வெளிப்புறமாக குளத்தை கிரவல் இட்டு நிரப்பி கட்டடங்கள் அமைப்பது ஏற்கனவே எடுக்கப்பட்ட கூட்டத் தீர்மானங்களுக்கு முரணானது. எனவே எம்மால் அனுமதிக்கப்பட்ட பகுதிக்கு வெளிப்புறமாக கட்டப்பட்ட அனைத்து கட்டடங்களையும் மற்றும் நிரப்பப்பட்ட மண்ணையும் உடனடியாக அகற்றுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் கடிதத்துக்கு ஏற்ற வகையில் எவ்வித நடவடிக்கைகளையும் நகரசபை செயற்படுத்தவில்லை என குளத்தைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது. (வ-110)

# விஜயதாச ராஜபக்சவுக்கு எதிராக பொலிஸில் முஜிபுர் முறைப்பாடு

## அசாத் சாலியை கைதுசெய்ய முடியுமெனின் இவரையும் கைதுசெய்யலாம் என்று விடாப்பிடி

**கொழும்பு, மார்ச் 19**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தன்னைத் தொடர்புப்படுத்தி விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ள கருத்து உண்மைக்குப் புறம்பானது என்ப தால், அவருக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடளிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். அசாத் சாலிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியு மெனில், விஜயதாச ராஜபக்சவுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் விஜய தாச ராஜபக்சவால் முன்வைக்கப் பட்டுள்ள கருத்துக்கள் வெறுக்கத் தக்கவை. உயிர்த்த ஞாயிறு தாக் குதல் தொடர்பான ஜனாதிபதி விசா ரணை ஆணைக்குழுவின் அறிக் கையை அடிப்படையாகக் கொண்டு என்னைப்பற்றி அவர் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் கூறிய கருத்துக்கள் உண்மைக்குப் புறம் பானவை. அவர் குண்டுத் தாக்கு தல்கள் தொடர்பில் அறிந்திருந் தால் ஊடகங்களுக்குத் தெரிவிப் பதை விடுத்து, குற்றப் புலனாய்வுப் பிரிவில் தெரிவித்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்திருக்க முடியும். எனினும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் அவர் இதற்கு முரணான கருத்துக்களையே முன் வைத்திருந்தார்.

தற்போது என்னுடைய நற்பெய ருக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில் அவர் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவருக்கு அமைச்சுப் பதவி வழங் கப்படாமைக்கு, முஸ்லிம் தலைவர் கள் தான் காரணம் என்று அவர் தெரிவித்துள்ள கருத்தும் உண் மைக்குப் புறம்பானது.



அவர் அன்றைய எதிர்க்கட்சியுடன் இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டதன் காரணமாகவே, அமைச்சுப் பதவியை வழங்காதிருக்க ஏகமனதாகத் தீர் மானிக்கப்பட்டது. இதுவே உண்மை. புர்காவை தடை செய்ய நடவ டிக்கை எடுக்கவுள்ளோம் என்று அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித் துள்ள கருத்தும் வெறுக்கத்தக்கதா கும். - என்றார். (கு-இ)

# சமையல் எரிவாயு விலை அதிகரிக்காது

கொழும்பு, மார்ச் 19

நாட்டில் சமையல் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு இல்லை. எனவே அதன் விலையை அதிகரிப்ப தற்கான அவசியமில்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அதேவேளை அரிசி, தேங்காய், பால் மா, மீன், இறைச்சி, முட்டை, பருப்பு, வெங்காயம், உருளைக் கிழங்கு, மரக்கறி மற்றும் சமையல் எரிவாயு போன் றவற்றுக்கான, நிவாரணங்களை நுகர்வோருக்கு வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட் டுள்ளது எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (கு-இ)

# புத்தர் சிலை உடைப்புடன் அசாத் சாலிக்கு தொடர்பு!

## கைதுக்கு காரணம் கூறுகிறார் அமைச்சர் சரத் வீரசேகர

கொழும்பு, மார்ச் 19

மாவனெல்ல பிரதேசத் தில் புத்தர் சிலை உடைக் கப்பட்ட சம்பவத்துடனும், ஈஸ்டர் குண்டுத் தாக்குத லுடனும் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி நேரடியாக வும், மறைமுகமாகவும் தொடர்புபட்டுள்ளார் என்ற சந்தேகத்தில் அவரைக் கைது செய்து தடுத்து வைத்து விசாரித்து வரு கின்றோம். இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசே கர தெரிவித்தார்.

கொலன்னாவ பிரதேசத் தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை ஊடகங்க ளுக்கு கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் நாட்டின் சட்டம் தொடர்பில் அவர் தெரி வித்த கருத்துத் தொடர் பாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. விசார ணைகள் இடம்பெறுகின் றன என்றும் குறிப்பிட்ட சரத் வீரசேகர, மதத்தை முதன்மைப்படுத்திய வெறுக்கத்தக்க கருத்துக் கள் அடிப்படைவாத முரண்பாடுகளைத் தோற்று விக்கும் என வும், கடந்த காலங்க ளில் இவ்வாறான தன்மை காணப்பட்ட தால் சர்ச்சைக்குரிய கருத்துக்களை ஒருபோ தும் அலட்சியப்படுத்த முடியாது என்றும் தெரி வித்தார். (ஒ.இ)

# இன்று பங்களாதேஷ் செல்கிறார் மஹிந்த

கொழும்பு, மார்ச் 19

பிரதமர் மஹிந்த ராஜபக்ச இருநாள் உத்தியோகபூர்வ பயணமாக இன்று பங்களாதேஷுக்கு பயணிக்கவுள் ளார். பங்களாதேஷ் பிரதமர் ஷெய்க் ஹசீனாவின் அழைப்பின் பேரில் இன்றும், நாளையும் இடம்பெ றும் பங்களாதேஷ் குடியரசின் தேசத்தின் தந்தை யாக போற்றப்படும் பங்கபந்து ஷெயிக் முஜிபர் ரஹ்மானின் ஜனன தின நூற்றாண்டு விழா மற்றும் பங்களாதேஷின் சுதந்திர பொன்விழா உள்ளிட்ட நிகழ்வுகளில் பிரதமர் பங்கேற்கவுள்ளார்.

கடுமையான சுகாதார முன்னெச்சரிக்கைகளுடன் அவரது பயணம் அமையும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (கு-இ)

# சு.க.வின் மத்திய குழுக் கூட்டம்

கொழும்பு.மார்ச் 19

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத் தியக் குழு கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற வுள்ளது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கட்சியின் மத்தியகுழு ஒன்று கூடும் என்று கட்சியின் பொதுச் செயலாள ரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இதேவேளை, மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் தற்போது செயற்பட்டு வரும் மாகாண சபைகளைச் செயற் படுத்துவதற்காக, தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப் பாட்டில் சிறிலங்கா பொதுஜன பெர முன உள்ளது என்று தெரிவிக்கப்ப டுகிறது. எனினும் மாகாண சபைத் தேர்தலை பழைய முறையின்படி நடத்துவதே கட்சியில் உள்ள பெரும் பான்மையானவர்களின் விருப்பம் என்று ஐக்கிய மக்கள் சக்தி தனது கருத்தை வெளியிட்டுள்ளது. (கு-இ)

# ஏப்.21. குண்டுதாரிகளுடன் ஜனாதிபதியும், பிரதமரும்

## போலிப்படங்களைத் தயாரித்தவர் கைது

கொழும்பு.மார்ச் 19

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்க ளுடன் தொடர்புடைய குண்டு தாரிகளின் புகைப்படங்களுடன், ஜனாதிபதி மற்றும் பிரதமரின் புகைப்படங்களை இணைத்து, போலியான புகைப்படங்களைத் தயாரித்தவர் கைதுசெய்யப்பட் டுள்ளார். மாத்தளை பிரதேச சபையின் முன்னாள் உப தலை வரும், சுயாதீன குழுவின் தற் போதைய உறுப்பினருமான மலல் பண்டார ஏக்கநாயக்க என்பவரே இவ்வாறு கைதுசெய் யப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவங்களில் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்திய குண்டு தாரிகளுடன், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீன். நிற்கும் புகைப்படங்களில், ரிஷாத் பதியூதீனின் தலைக்குப் பதிலாக, ஜனாதிபதி மற்றும் பிர தமரின் தலைகளை அவர் இணைத்துள்ளார்.

“ 100 சேர்ட்டுகள் அணிந்திருந் தாலும் இனங்காண முடியாத ஒன்று இந்த படங்களில் உறுதி யாகிறது” என்று எழுதப்பட்ட புகைப்படங்களைத் தயாரித்து, அவற்றை இணையத்தளங்க ளில் தரவேற்றியுள்ளார். அது தொடர்பில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசார ணைகளின் அடிப்படையில் சந் தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் கொழும்பு பிரதான நீதிவான் புத்திக சிறி ராகலவின் உத்தரவின் பேரில், விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளார். (கு-இ)

# 200 எம்.பிக்களே தடுப்பூசி ஏற்றினர்

கொழும்பு.மார்ச் 19

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 200 பேரே கொவிட்-19 தடுப்பூசியை ஏற் றினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், நாடாளுமன்றப் பணிக் குழாமில் 800 பேர் தடுப்பூசி ஏற்றி யுள்ளனர்.

அதேவேளை நாடாளுமன்ற உறுப் பினர்கள் மற்றும் பணிக்குழாமின ரிடையே 20 பேர் கொவிட்-19 தொற்றா ளர்களாக அடையாளம் காணப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-இ)

# அரசின் அடாவடி ஆட்டத்துக்கு 20 ஆவது திருத்தமே காரணம்

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு.மார்ச் 19

அரசின் ஜனநாயக விரோதமான செயல் களுக்கு, 20 ஆவது திருத்தமே கார ணம். ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டி யிட்டு நாடாளுமன்றத்துக்குச் சென்றவர் களின் ஆதரவுடனே அரசு அதனை நிறைவேற்றியது. இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் பொறுப் புக்கூறவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்தித் சமரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையக மான சிறிகொத்தாவில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்போம், இயற்கை வனாந்திரங் களைப் பாதுகாப்போம் என்று தெரி வித்து ஆட்சிக்கு வந்த அரசு, அதற்கு மாறாகவே செயற்பட்டு வருகின்றது. மக்களுக்கு சுதந்திரமாக அவர்களது கருத்துக்களைத் தெரிவிக்க முடியாமல் உள்ளது. அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் அச்சுறுத் தப்படுகின்றனர்.

20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிய பின்னரே தாம் நினைக்கும் எதனை வேண்டுமானாலும் செய்வோம் என்ற நிலைப்பாட்டில் அரசு உள்ளது. அரசு மேற்கொள்ளும் ஜனநாயக விரோத நட வடிக்கைகளை தடுத்து நிறுத்தவோ, அதற்கு எதிராக செயற்படுவதற்கோ எதிர்க்கட்சிக்கு முடியாமல் உள்ளது- என்றார். (கு-இ)

## 20 வீடுகள் தீக்கிரை

நுவரெலியா,மார்ச் 19

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரவுன்ஸ்விக் தோட்ட ராணி தோட்டத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 20 வீடுகள் தீக்கிரையாகின. மஸ்கெலியா பிரதேச சபையினர் மற்றும் பொலிஸார் விரைந்து சென்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

தோட்ட நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்கள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தினர்.

பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# கொரோனாவிலிருந்து மீள நாடுகளுக்கு உதவத் தயார்

## ஐ.நா. தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 19

**கொரோனாத் தொற்றுநோயை மீட்டெடுக்கும் காலப்பகுதியில், அனைத்து நாடுகளுக்கும் உதவ, எவரும் பின்வாங்கவில்லை. பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளனர் என்று ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்தார்.**

உலகெங்கிலும் உள்ள அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் தடுப்பூசிக்குக் கணிசமான நிதியை வழங்குகின்றன.

இந்த கூட்டாண்மைக்கு நாங்கள் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். இலங்கையில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்தை உறுதி செய்வதன் மூலம், சமூக மற்றும் பொருளாதார மீட்சி கிடைக்கும். அதேவேளை இந்தத் தொற்றுநோயையும் ஒன்றாகத் தோற்கடிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# கேபிள் கார் திட்டத்துக்கு பிரான்ஸ் அரசு கடனுதவி

கொழும்பு,மார்ச் 19

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், கண்டியில் அமைக்கப்படவுள்ள கேபிள் கார் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான கடனுதவியை வழங்க பிரான்ஸ் அரசு முன்வந்துள்ளது.

குறைந்த வட்டியுடன் இந்தக் கடனுதவி வழங்கப்படும் என்று இலங்கைக்கான பிரான்ஸ் தூதரகம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்தில் கொண்டு இந்த கேபிள் கார் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# தோட்டத் தொழிலாளர் உழைப்பை சுரண்டாதீர்

## லெனினிசக் கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

தோட்டத் தொழிலாளர்கள் பெரும் போராட்டங்களுக்கு மத்தியில் பெற்ற ஆயிரம் ரூபா சம்பள உயர்வின் பயனை, முதலாளிகள் தட்டிப் பறிப்பதையோ அல்லது வேறு வழிகளில் அவர்களது உழைப்பைச்சுரண்டவோ இடமளிக்க முடியாது.

எனவே தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான முதலாளிகளின் நேரடி மறைமுக அடக்குமுறைகளையும், புதிய வழிகளில் சுரண்டலை முன்னெடுக்கும் சூழ்ச்சி முயற்சிகளையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த ஆறு வருடங்களாக ஆயிரம் ரூபா அடிப்படை நாள் சம்பளத்துக்காகப் போராடி வந்தனர். அதன் பயனாக அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற அரசின் வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது.ஆனால் கைக்கு எட்டியதை வாய்க்கு எட்டவிடாது தடுப்பதில் தோட்ட முதலாளிகள் கீழ்த்தரமான வழிகளில் ஈடுபட்டுள்ளனர்.

வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராகத் தடையுத்தரவைப் பெற உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

எனவே தொழிலாளர்கள் அனைவரும் தொழிற்சங்க அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அணிதிரண்டு போராடுவது அவசியமாகும் - என்றுள்ளது. (க-இ)

## கஞ்சா கடத்தல் இருவர் கைது

கொழும்பு,மார்ச் 19

பெருமளவிலான கேரள கஞ்சாப் பொதிகளுடன் சந்தேகநபர் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

அநுராதபுரம், இசுருபுரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஓய்வு விடுதியொன்றில்வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 5கோடி ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது. மற்றுமொரு சந்தேகநபர் தப்பியோடியுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

# அரசின் 'டம்மி' தலைவர்களால் ஏமாற்றப்படும் தொழிலாளர்கள்

## இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் கொதிப்பு

கொழும்பு,மார்ச் 19

ராஜபக்ச அரசு, 'டம்மி' மலையகத் தலைவர்களை வைத்து, தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றி வருகிறது. இதற்கு கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களும் துணை நிற்கின்றன.

இவ்வாறு அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கிட்ணன் செல்வராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வேண்டும் என 2015 ஆம் ஆண்டிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இதற்கு தோட்டக் கம்பனிகள் இணக்கம் தெரிவிக்கவில்லை. இறுதியில் சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பளத்தை நிர்ணயிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கும் கம்பனிகள் எதிர்ப்பை வெளியிட்டன.

ஆனாலும் ஆயிரம் ரூபா தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

ஆனால் வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைக்கு வருவதற்கு தடை விதிக்குமாறு கோரி கம்பனிகள் நீதிமன்றம் சென்றுள்ளன. சர்வ அதிகாரங்களும் கொண்ட பலம்பொருந்திய அரசால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை கம்பனிகள் சவாலுக்கு உட்படுத்தியுள்ளன.

நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தால் தமது நிலைப்பாடு என்னவென்பதனை அரசு அறிவிக்க வேண்டும். அதேபோல் ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (க-இ)

# நோர்வூட் பிரதேசசபை 10 நாள்களுக்கு பூட்டு

நுவரெலியா,மார்ச் 19

நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து, 10 நாள்களுக்கு பிரதேச சபை நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளன.


நோர்வூட் பிரதேச சபையின் உபதவிசாளரின் மனைவிக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, அவரோடு தொடர்பைப் பேணியவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதில் உப தவிசாளர், அவரது தாயார் மற்றும் உப தவிசாளரின் வியாபார நிலையத்தில் பணியாற்றும் பெண் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அத்துடன் நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், மூன்று உறுப்பினர்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதனால் பிரதேச சபை நடவடிக்கைகள் தற்காலிகமாக 10 நாள்களுக்கு முடக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# வெளிநாடுகளில் சிக்கியுள்ளோரை விரைவாக நாட்டுக்கு அழையுங்கள்

கொழும்பு,மார்ச் 19



கொவிட் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களைத் துரிதமாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்ததாவது:

கொவிட் பரவலின் போது அரசுக்குக் கிடைக்க பெற்ற நன்கொடை நிதியூடாகவேனும் இவர்களை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விடுமுறையில் வருபவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதால், பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

அரசின் சகாக்களின் ஹொட்டல் வர்த்தகத்துக்காக வெளிநாடுகளிலிருந்து வரும் இலங்கையர்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இது தொடர்பில் உரிய அவதானம் செலுத்துமாறு அரசை வலியுறுத்துகின்றோம். என்றார்.

வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதை வலியுறுத்தி, ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் இன்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-இ)

# இலங்கையில் 2.65 மில்லி. முதியவர்களுக்கு தடுப்பூசி

கொழும்பு,மார்ச் 19

இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்ட 2.65 மில்லியன் முதியவர்களுக்கு தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

'கொவேக்ஸ் திட்டம்', உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் பல நன்கொடையாளர்கள் தரப்புக்கள் இடையேயான உடன்பாட்டுடன் அவர்களுக்கான தடுப்பூசி பெற்றுக் கொள்ளப்படும் என்று யுனிசெப் தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் தகவல்படி, நாட்டில் சுமார் 2.65 மில்லியன் முதியவர்கள் உள்ளனர்.

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா 'கொவிஷீல்ட்' தடுப்பூசிகளின் முதல் தொகுதி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. தற்போது இலங்கை உட்பட உலகளவில் கொரோனாத் தடுப்பூசிகளின் சமமான விநியோகத்தை உறுதி செய்வதற்காக, பல்வேறு தரப்பினர் ஆதரவையும், நிதியையும் வழங்குகின்றனர் [illegible] என்றும் யுனிசெப் [illegible] தெரிவித்துள்ளது. (க-இ)

# கட்சிகளின் பெயர் மாற்றம் ஆய்வுக்கு

கொழும்பு,மார்ச் 19

இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சிகளின் பெயர்களை மாற்றுவது தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இனம், மதத்தின் அடிப்படையில் இதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகளின் பெயர்களை மாற்றுவதற்கு கால அவகாசத்தை வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் அவ்வாறான கட்சிகளைப் பதிவு செய்யாமல் இருப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது, என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# ஐ.நா. ஆணையாளரை இலங்கைக்கு அழையுங்கள்

## அரசுக்கு ஆலோசனை கூறுகிறார் கலாநிதி பிரதீபா மஹாநாம ஹேவா

**கொழும்பு, மார்ச் 19**

**ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்செலெட்டை இலங்கைக்கு கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொள்ளுமாறு அரசு அழைப்பு விடுக்கவேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும், அனைத்துலக அரசியல் விமர்சகருமான கலாநிதி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு 2014 ஆம் ஆண்டிலும் இதேபோன்றதொரு நிலைதான் ஏற்பட்டிருந்தது. அப்போது ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளராக இருந்த பேராசிரியர் நவநீதம்பிள்ளைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதை ஏற்று அவர் நாட்டுக்கு வந்தார். நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்டார். குறைகளையும் பட்டியலிட்டுக் காட்டினார். ஆனாலும் அவர் யதார்த்தத்தை புரிந்துகொண்டார். இளைஞர் நாடாளுமன்றம் குறித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இலங்கை வருவதற்கு முன்னர் இலங்கை தொடர்பில் இருந்த மனநிலை, விஜயத்தின் பின்னர் மாறியுள்ளது என்று அவர் குறிப்பிட்டிருந்தார். யாழ். பயணத்தின் போது மொழி உரிமைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை உணர்ந்தார்.

எனவே, இலங்கை வருமாறு தற்போதைய மனித உரிமைகள் ஆணையாளருக்கும் அழைப்பு விடுக்கவேண்டும். அதை பிறநாடுகள் சாதகமான விடயமாக பார்க்கக்கூடும். அறிக்கைகளை மட்டும் அடிப்படையாகக்கொண்டே இலங்கை தொடர்பில் அவர் விம்பமொன்றை உருவாக்கி வைத்திருப்பார். ஆகவே, இலங்கைக்கு நேரில் வந்து, பல தரப்புகளுடன் கலந்துரையாடி நிலைமையைக் கண்காணித்தால் அவரால் யதார்த்த நிலைமையைப் புரிந்து கொள்ள முடியும். தவறான விம்பமும் உடையக்கூடும்.

அறிக்கையாளர்கள் வருவதைக்காட்டிலும் மனித உரிமைகள் ஆணையாளர் நேரில் வந்தால்தான், நாட்டின் பிரச்சினைகள் குறித்து இலங்கை என்ன செய்துள்ளது, எவ்வாறான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதை நேரில் அவதானிக்க முடியும் - என்றார். (ற-44)

# சகல மக்களுக்கும் 2025 இல் குடிதண்ணீர்

## அமைச்சர் வாசுதேவ உறுதி

கொழும்பு,மார்ச் 19



2025 ஆம் ஆண்டாகும் போது நாட்டில் அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீரை வழங்குவோம். அந்த இலக்கை அடைவதற்கான வேலைத் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

உலக நீர் தினத்தை முன்னிட்டு நீர்வழங்கல் அமைச்சு மேற்கொண்டுள்ள நீர் வழங்கல் திட்டம் தொடர்பாக ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 22 ஆம் திகதி உலக நீர் தினத்தை முன்னிட்டு நீர் வழங்கல் அமைச்சு, நீர் வழங்கல் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த வேலைத்திட்டங்களால் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு குடிதண்ணீர் வசதி கிடைக்கப் பெறும். 2025 ஆம் ஆண்டில் அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் அரசின் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. நீர்க் கட்டணத்தை அதிகரிக்கும் எந்த நோக்கமும் எமக்கில்லை.

எனினும் நீர் விரயமாகாமல் பாதுகாத்துக் கொள்வது அனைவரதும் பொறுப்பாகும். அதனால் நாட்டில் எந்த பிரதேசத்திலாவது நீர் கசிவுகள் இடம்பெறுவதைக் கண்டால் 1939 என்ற எமது துரித இலக்கத்துக்கு அறிவிக்கவும் - என்றார். (க-இ)

# காட்டிக்கொடுத்தவர் பிரதமர் மஹிந்தவே

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 19

உள்நாட்டிலுள்ளவர்கள் சர்வதே நீதியைக் கோரினால், அவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்று அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். அவ்வாறெனில் முதன் முதலில் இலங்கையைக் காட்டிக்கொடுத்தவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ச என்பதை மறக்க வேண்டாம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மக்களால் நியாயமாக முன்வைக்கப்ப டும் கோரிக்கைகளை இந்த அரசால் நிறைவேற்ற முடியவில்லை. எனினும் குற்றத்தைக் கண்டுபிடித்து, தண்டிக்க முயல்கிறது. சீனி இறக்குமதி வரி குறைப்பின் மூலம் இடம்பெற்ற மோசடியை மறைப்பதற்காக



சிங்கராஜவனம் தொடர்பில் கருத்து தெரிவித்த பெண், ஜனாதிபதியால் பாராட்டப்பட்டிருக்க வேண்டும். எனினும் அவர் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். நாட்டில் புர்கா தடை விவகாரம் பரப்பிவிடப்பட்டுள்ளது. மறுபுறம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பும் இழுத்தடிக்கப்படுகிறது. நல்லாட்சி அரசால் கட்டப்பட்ட பல மாடி வீடுகள் இன்னும் மக்களுக்குக் கையளிக்கப்படவில்லை. அவற்றில் 32 வீடுகளை கொழும்பில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம். இனியாவது மக்களது கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு முயற்சிக்க வேண்டும். என்றார். (க-இ)

# எதிர்க்கட்சியை இனியும் நம்பாதீர்

## கூறுகிறது புதிய ஜனநாயக மக்கள் முன்னணி

கொழும்பு,மார்ச் 19

கடந்த நல்லாட்சியில் வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கொழும்பில் ஒரு அடிக்கல் கூட நடவில்லை. தொடர்ந்தும் எமது மக்களை இவர்கள் ஏமாற்ற முடியாது. இனிவரும் காலங்களில் கொழும்பு வாழ் மக்கள் சிந்தித்துச் செயல்படுவார்கள்.

இவ்வாறு புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவர் சமன் குமார் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பு கஜீமாத்த தீ விபத்தால் சுமார் 34 வீடுகள் முற்றாக சேதமடைந்தன. அங்கு இருந்தவர்களின் சகல ஆவணங்களும், அனைத்து உடைமைகளும் தீக்கிரை யாக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையானவற்றை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கிராமசேவகர் பிரதேச செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தனர்.

எனவே தீக்கிரையாக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்க்கையை அரசியல் ஆக்காமல், அனைத்துக் கட்சிகளும் இணைந்து அவர்களுக்கு என்ன உதவி செய்யலாம் என்பதையே கவனத்தில் கொள்ள வேண்டும்.

பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்க வேண்டாம். இனியும் மக்கள் அவர்களை நம்பத் தயார் இல்லை என்றுள்ளது. (க-இ)

## அத்தியாவசியப் பொருள்களின்

# விலையேற்றம் அரசுக்கு சவால்

## எச்சரிக்கின்றார் வாசுதேவ

கொழும்பு,மார்ச் 19

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் அரசுக்குப் பெரும் சவாலானது. புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய பொருள்களின் விலை பகுதியளவேனும் குறைக்கப்படாவிட்டால், மக்கள் அரசுக்கு எதிராக செயற்படுவார்கள். இது தொடர்பில் வர்த்தகத் துறை அமைச்சு உரிய கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நீர்வழங்கல் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட்19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் அரசு பொருளாதாரத்தை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்துள்ளது. சிறு ஏற்றுமதிப் பயிர்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டதன் காரணமாக,சந்தையில் சிறுஏற்றுமதிப் பயிர்களுக்கான கேள்வி அதிகளவில் காணப்பட்டாலும்,உள்ளூர் விவசாயிகள் பெருமளவில் பயனடைந்துள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதமளவில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் பெருமளவில் குறைக்கப்பட்டன. சீனிக்கான இறக்குமதி வரியும் குறைக்கப் பட்டது. இதனையே எதிர்தரப்பினர் தற்போது சீனி மோசடி என்று குறிப்பிட்டுக் கொள்கின்றனர். ஆனால் எவ்வித மோசடிகளும் இடம்பெறவில்லை. சீனி விலைக் குறைப்பின் பயனை நுகர்வோர் பெற்றுக் கொள்வதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனை வைத்து எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கின்றனர். அரிசியின் நிர்ணயத்தன்மையை நிலையாகப் பேணுவதில் சிக்கல் நிலை காணப்படுகிறது. அரிசியின் மொத்த உற்பத்தியை அரசு முழுமையாக பொறுப்பேற்க வேண்டும் - என்றார். (க-இ)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு டக்ளஸும் பொறுப்புக்கூற வேண்டும்

## அவரைச் சந்திக்கமாட்டோமென உறவுகள் உறுதி

**யாழ்ப்பாணம், மார்ச் 19**

**எமது உறவினர்கள் காணாமல் ஆக்கப்பட்டதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவும் பொறுப்புக்கூற வேண்டும். அவரைச் சந்திப்பதற்கு எமது விருப்பம் இல்லை. இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் சங்கம் தெரிவித்துள்ளது.**

அந்தச் சங்கத்தின் தலைவி இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதியின் அறிவிப்புக்கு அமைய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்திக்கவுள்ளேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். ஆனால் நாம் அவரை ஒரு போதும் சந்திக்கப் போவதில்லை. அவரை சந்திக்கும் விருப்பமும் எமக்கில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பொறுப்புக் கூற வேண்டும் என எமது உறவுகள் தொடர்ச்சியாக கூறி வருகின்றனர். தற்போதைய ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த போதே எங்கள் உறவுகள் அதிகம் காணாமல் ஆக்கப்பட்டனர். பின்னர் மஹிந்த ராஜபக்ச அரசின் காலத்திலும் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களுடைய அரசில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவால் எந்தத் தீர்வும் கிடைக்க வில்லை. மாறாக எங்கள் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பியும் காரணம். இதைத் தெரிவித்த எமது தாய்மாரை நீதிமன்றில் நிறுத்தப் போகின்றேன் என்று அமைச்சர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் நாம் அவரை எப்படிச் சந்திக்க முடியும்? எமக்கு இலங்கை அரசால் நீதி கிடைக்கும் என்ற நம்பிகை அற்றுப் போய்விட்டது. அந்த அரசின் பிரதிநிதியாக உள்ள அமைச்சரைச் சந்திப்பதில் பயனில்லை. சர்வதேசமே எமக்கான நீதியை பெற்றுத் தர வேண்டும் -என்றனர். (ப-214)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அமைப்புக்கள் உள்நோக்கம் மிக்கவை

## அமைச்சர் டக்ளஸ் எகத்தாளம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அமைப்புக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உள்நோக்கங்களுடன் செயற்படுகின்றன என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை அமைச்சர் சந்திக்கவுள்ளார் என்று அறிவித்திருந்த நிலையில் தாம் அமைச்சரைச் சந்திக்க விரும்பவில்லை என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

> நான் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று யோசிக்கின்றேன். அவர்கள் பிரச்சினையை தீராப் பிரச்சினையாக வைத்திருக்க யோசிக்கின்றார்கள்.

இது தொடர்பில் அமைச்சரை தொடர்புகொண்டு வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

என்னைச் சந்திப்பதும் விடுவதும் அவர்களது விருப்பம். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒவ்வொரு அமைப்புக்களும் ஒவ்வொரு உள்நோக்கங்களுடன் செயல்படுகின்றன. எனவே அவர்கள் அதற்கேற்ற மாதிரியே செயற்படுவார்கள். நான் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று யோசிக்கின்றேன். அவர்கள் பிரச்சினையை தீராப் பிரச்சினையாக வைத்திருக்க வேண்டும் என யோசிக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவின்ர்களை சந்திப்பதற்கு கடந்த முறை நான் அழைப்பு விடுத்து நூற்றுக் கணக்கானவர்கள் வந்து என்னைச் சந்தித்தார்கள். பின்னர் அச் சந்திப்புக்களை அரசியல் சூழ்நிலையால் தொடர முடியவில்லை. தற்போது நான் அதனை மீண்டும் தொடர்கின்றேன். நான் சங்கங்களுக்கு அழைப்பு விடவில்லை பாதிக்கப்பட்டவர்களுக்கே அழைப்பு விடுத்துள்ளேன். அவர்களை நான் வலிந்து அழைக்கவுமில்லை. எனவே அவர்கள் விரும்பினால் வந்து சந்திக்கலாம்- என்றார். (ப-214)

# 2 இடங்களில் அகழ்ந்தும் எவையுமே சிக்கவில்லை

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் இரு வேறு இடங்களில் அகழ்வுப் பணி நேற்று நடைபெற்றது. எனினும், எந்தவிதப் பொருள்களும் சிக்கவில்லை. அதனால் அகழ்வு கைவிடப்பட்டது. பாரதிபுரம் மகா வித்தியாலய பாடசாலைக்கு பின்பகுதியில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் தங்கியிருந்தனர் என்று கருதப்படும் இரு வேறு இடங்களிலேயே அகழ்வுப் பணிகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. கிளிநொச்சி நீதிமன்றில் குறித்த அகழ்வுப் பணிக்காக அனுமதி பெறப்பட்டு கிளிநொச்சி நீதிபதி ரி.சரவணராஜாவின் கண்காணிப்பின் கீழ், குறித்த அகழ்வுப் பணிகள் நடைபெற்றன.

எனினும், எவ்விதமான பொருள்களும் அடையாளம் காணப்படவில்லை. அதனால் குறித்த பணியை இடைநிறுத்துமாறு நீதிவான் பணித்ததற்கு அமைவாக அகழ்வு கைவிடப்பட்டது. இதன் போது கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ் அலுவலர்கள், கிராம அலுவலர், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட பலரும் அங்கு முன்னிலையாகியிருந்தனர். (த-6)





# உரிமைகள் மறுக்கப்படும்போது நீங்களாக கிளர்ந்தெழவேண்டும்

## வடக்கு ஆளுநர் மகளிர் தினத்தில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 19

பெண்களுடைய பிரதிநிதித்துவம் அரசியலில் மிகக்குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் அரசியல் ரீதியாக சில கொள்கைகளிலும், சட்டவாக்கங்களிலும் பெண்களது உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன என வடமாகாண ஆளுநர் பி. எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்ட அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நான் பல மாவட்டச் செயலர்களின் கீழ் பணியாற்றியுள்ளேன். ஒரு பெண் அரச நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றிய போது பெண்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவற்றுக்காக நான்குரல் எழுப்பி பழிவாங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. நான் மாவட்டச்செயலராக இருந்தபோது அந்த விடயங்கள் இடம்பெறக்கூடாது என்பதில் கவனமாக இருந்தேன். நிர்வாக சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் அனைத்து அதிகாரிகளும் எந்த இடத்திலும், எந்தப் பகுதியிலும் கடமையாற்ற வேண்டும். ஆனாலும் சில மாவட்டச் செயலர்கள் இந்தப் பதவியைப் பெண்ணால் வகிக்க முடியுமா என்று கேட்ட சந்தர்ப்பங்களை நான் இன்னும் மறக்கவில்லை. அவையே எனக்கு சவால்களாக மாறி சாதனைகளாக மாறின என்பது தான் உண்மை.

எங்கு அடக்கப்படுகின்றீர்களோ, எங்கு உங்களது உரிமைகள் மறுக்கப்படுகின்றனவோ எங்கு நீங்கள் தடுக்கப்படுகின்றீர்களோ அங்கு தான் நீங்கள் கிளர்ந்து எழ வேண்டும். அங்குதான் உங்களுக்கு சாதனைகள் இருக்கும். கடமைகளை சரியாகச் செய்கின்றபோது பதவிகள் தானாகவே தேடி வரும். பெண்களுடைய பிரதிநித்துவம் அரசியலில் மிகக்குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் அரசியல் ரீதியாக சில கொள்கைகளிலும், சட்டவாக்கங்களிலும் பெண்களது உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன.

காணி உரிமைச் சட்டத்தில் மூன்றாம் அட்டவணையில் பெண்களுக்கு காணி உரிமையை மாற்றுவது மறுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது குடும்பத்தில் மூத்த ஆண் மகனுக்குத் தான் காணி உரிமை மாற்றப்படுகின்றது. இந்த சட்டம் திருத்தப்பட வேண்டியதாக இருக்கின்றது.

திருமண அத்தாட்சிப் பத்திரமான பதிவுத் பத்திரத்தில் பெண்களின் தொழிலைப் பதிவ தற்கான இடம் வழங்கப்படவில்லை.

காலனித்துவ ஆட்சியில் பெண்கள் உத்தியோகம் பார்க்கவில்லை. அதனால் அன்று வடிவமைக்கப்பட்ட படிவங்களில் அவை காணப்படவில்லை. குடும்ப வன்முறை சம்பந்தமான சட்டவாக்கம் இருக்கின்ற போதிலும் பெண்கள் பொலிஸ் நிலையம், நீதிமன்றம் போன்ற இடங்களுக்கு செல்கின்ற போது அவர்கள் கையாளப்படுகின்ற முறைகளால் பெண்கள் நீதிமன்றங்களையும், பொலிஸ் நிலையங்களையும் தவிர்த்துக் கொள்ளும் நிலமை காணப்படுகின்றது.

பெண்கள் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் போது தான் சட்டவாக்கம் ஊடாகவும், கொள்கை வகுப்பின் ஊடாகவும் பெண்களைப் பாதுகாக்கும் ஒரு நிலமை இந்த நாட்டில் ஏற்படும். வடமாகாணத்தில் மகளிர் விவகாரம் என்பது எமது மாகாண அதிகார பரம்பலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

பெண்களின் வாழ்வாதாரம், அவர்களது பிரச்சனைகள் தொடர்பில் நாங்கள் கொள்கை வகுப்பில் ஈடுபட்டுள்ளோம். அந்த கொள்கை வகுப்பின் மூலம் வட மாகாணத்தில் இருக்கும் பெண்களின் பிரச்சினை களையும், அவற்றுக்கான தீர்வுகளையும் நாங்கள் விரைவிலே இனங்காண்டு அதற்கான திட்டங்களை வகுத்து அவர்களுக்கு உதவி செய்வோம் -என்றார். (ப-18)

# 3 லட்சம் மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யத் திட்டம்

முல்லைத்தீவு,மார்ச் 19
அரசால், தேசிய ரீதியில் தற்போது, நெல் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 3 இலட்சம் மெற்றிக்தொன் நெல்லைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

முல்லைத்தீவுக்கு நேற்றுமுன்தினம் பயணித்த அமைச்சர், ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் பகுதியில் உள்ள நெல் களஞ்சிய நடவடிக்கைகளை ஆராய்ந்தார்.

அங்கு பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

நெற்செய்கையாளர்கள் தாமாக முன்வந்து, நெல்லை அரசுக்கு வழங்கி வருகின்றமைக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார். அத்துடன் நெல் கொள்வனவுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் அதிகாரிகளுக்குப் பணித்தார். (க-இ)

# மதுஷானின் சடலம் இலங்கைக்கு

கொழும்பு,மார்ச் 19
டுபாயில் உயிரிழந்த பிரபல பாதாள உலகத் தலைவனும், போதைப்பொருள் கடத்தல் காரருமான கெஸ்வத்த தினுக எனும் ஆர்.ஏ.தினுக மதுஷானின் உடல் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இலங்கையில் சுட்டுக்கொலை செய்தல், அச்சுறுத்தி கப்பம் பெறுதல் மற்றும் போதைப் பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பாதாள உலகத்துடன் தொடர்புபட்ட பல திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் இவர் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் டுபாய்க்குத் தப்பிச் சென்றிருந்தார். அங்கு அவர் தங்கியிருந்த வீட்டில் உயிரிழந்துள்ளார். அதனையடுத்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு அவரது உடல் கொண்டு வரப்பட்டுள்ளது. (க-இ)


## பகிரங்க அறிவித்தல்

**வலிதெற்கு பிரதேசசபையின் நிர்வாக பிரிவிற்குள் மேற்கொள்ளப்படும் திரவக்கழிவகற்றல் (Gully Emptier ) சேவை தொடர்பானது**

எமது சபையின் நிர்வாக எல்லைக்குள் Gully Emptier மூலம் திரவக்கழிவகற்றல் நிலையத்தினை வைத்திருப்பவர்களும், திரவக்கழிவகற்றல் சேவையை வழங்குபவர்களும் தங்களது சேவை தொடர்பான பதிவுகளை வலிதெற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் எதிர்வரும் 31.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த திகதிக்கு பின்னர் பதிவுகளை மேற்கொள்ளாது, சபையின் அனுமதி பெறப்படாமல் திரவக்கழிவகற்றல் சேவையை (சுத்திகரிப்பு சேவை) மேற்கொள்வோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன்.

மேலும் இது தொடர்பான மேலதிக விபரங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும் .

திரு. க.தர்ஷன்
தவிசாளர்
வலிதெற்கு பிரதேச சபை
சுன்னாகம்

18.03.2021



## நான்காம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 30 . 09 . 1971
இறப்பு 02 . 04 . 2017

**சிவபுண்ணியம் செல்வநாதன்**
(முன்னாள் ப.நோ.கூ.சங்க முகாமையாளர் உடுப்பிட்டி)
(திதி:வளர்பிறை ஷஷ்டி)

கண்ணீருக்குள் நின் குடும்பம் ஆழ்ந்திருக்க
எண்ணமதில் உந்தன் இழப்பால் கதறியழ
கண்களும் இமைக்க மறந்ததையா - உந்தன்
பதுமையான பேச்சும் பதுமை நடையும்
நொடியினில் காணாது தவிக்கின்றோம்
தொலைபேசியில் உந்தன் செய்திவந்த கணம் முதல்!
உந்தன் வாய்மொழி நின்றாலும்
மூடிய விழி மலர்ந்திட நின்றாலும் நாதனே
எங்கள் மூச்சினில் கலந்திருப்பாய்
என்றும் எங்கள் பேச்சினில் நிறைந்திருப்பாய்.
வாழ்நாள்தனில் எம்மோடு வாழ்ந்திடுவாய்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

நெல்லியோடை, அச்சுவேலி தெற்கு. குடும்பத்தினர்.


## விசேட பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 19
யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பன்னாலை வரத்தளம் கற்பகவிநாயகர் தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடு நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கொரோனாத் தாக்கத்திலிருந்து நாட்டு மக்கள் மீள இறை ஆசி வேண்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த வழிபாடுகள் நடைபெறவுள்ளன. இவற்றின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் இடம்பெறும் ஆலய தரிசனம் நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரலையாக ஒலிபரப்பாகும். (வ-இ)


## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 12 . 1956
மறைவு 18 . 03 . 2021

**திரு.முருகுப்பிள்ளை சிவநேசன்**
(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்-பருத்தித்துறை)

வியாபாரிமூலை பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.முருகுப்பிள்ளை சிவநேசன் நேற்று (18.03.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை கற்பகநாயகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை மற்றும் பவளமாலிகை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவாம்பிகையின் அன்பு கணவரும், காலஞ்சென்ற நிரஜா மற்றும் ரஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலனின் அன்பு மாமனாரும், டாக்டர் சிவகுமார், சிவபாலன், சிவாஜினி, தயாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வாமதேவன், முரளிதரன் (முகாமையாளர், HNB கொட்டாஞ்சேனை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கேசிகன், பாரிதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
Dr.மு.சிவகுமார் (0767155126)
மு.சிவபாலன் (0759147828)



## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 02 . 1992
மறைவு 18 . 03 . 2021

**திரு. ஸ்ரீமோகன் நிதர்சன்**

அன்னார் 18.03.2021 வியாழக்கிழமை நேற்று அகால மரணமானார்.

அன்னார் நடராஜா ஸ்ரீமோகன் - ஸ்ரீமோகன் மகாலட்சுமியின் செல்வப் புதல்வனும், காலம்சென்ற ஸ்ரீமோகன் நிவேதன் மற்றும் நிவேதிகா, மேனகா, நிரோசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜ்மோகன், குகராஜன் மற்றும் பிரியங்காவின் மைத்துனரும், நிர்மலன், கனிஷ்டன், தீபிகா, ஷாலு மேஷியா, மைக்கல் கவின், மைக்கல் கெவினின் பாசமிகு மாமனும்மாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.03.2021 (வெள்ளிக்கிழமை) இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

செல்வபவனம்
ஸ்ரேசன் றோட்,
கொக்குவில்.

தகவல்:
நடராஜா ஸ்ரீமோகன் (தந்தை)
077 433 5174

## மரண அறிவித்தல்

மண்ணில்
28
03
1933



விண்ணில்
17
03
2021

### செல்லையாக் குருக்கள் நடராஜசர்மா
### (மாசிலாமணி ஐயா)

குப்பிளானை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு மற்றும் கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட செல்லையாக்குருக்கள் நடராஜசர்மா (மாசிலாமணி ஐயா - புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலய முன்னாள் ஆலயகுரு) அவர்கள் கோண்டாவில் பழனி ஆண்டவர் கோவில் வீதியில் உள்ள அவரது மகள் வீட்டில் 17.03.2021 அன்று இரவு இறைவனடி சேர்ந்தார்.


அன்னாரின் இறுதிகிரியைகள் நேற்று (18.03.2021) மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் (பழனி ஆண்டவர் வீதி கோண்டாவில்) நடைபெற்றது. மற்றும் தகனக்கிரியைகள் கோண்டாவில் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வருக்கும் அறிய தருகின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 6914 158**

## மரண அறிவித்தல்

பிறப்பு
19
09
1940



இறப்பு
18
03
2021

### விநாயகன் நாகராஜா

வேலணை மேற்கு 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் மாதனை, பருத்தித்துறை, சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகன் நாகராஜா நேற்று (18.03.2021) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகன் அன்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், ஜெயலட்சுமியின் பாசமிகு கணவரும், மகேந்திரன் (ஆசிரியர், யா/அரியாலை கிழக்கு GTMS), சுகந்தினி (கனடா), சுதந்திரன் (புள்ளிவிபர உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), பிரதீபன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவநிதி, விக்கினேஸ்வரன் (கனடா), ருக்மணி (ஆசிரியர், யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), விஜிதா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், தனுஷியா (மருத்துவபீடம், பேராதனை பல்கலைக்கழகம்) விதுர்ஷன் (NAITA மாணவன்) தீபிகா (A/L 2023 மாணவி, யா/வேம்படி மகளிர் கல்லூரி), அனுஷ்கா (கனடா), வர்ஷிகா, ஹர்சிகா (கனடா) அஜீபன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், குமாரசாமி மற்றும் தனலட்சுமி, தங்கராசா, சண்முகராசா, மாணிக்கம் (முன்னாள் ADE, யாழ். வலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2021) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**N.மகேந்திரன் 076343 2521**
**N.சுதந்திரன் 077 959 0922**

## மரண அறிவித்தல்

நயினாதீவு அமுத சுரபி அன்னதான சபையின் ஆரம்ப கர்த்தாவில் ஒருவரும், பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா நிலையம் (சாயி நயனம்) நயினாதீவின் ஆரம்ப கர்த்தாவும், சமய, சமூகத் தொண்டருமான

### உயர்திரு. முருகேசு சண்முகராசா



மண்ணுலகு
19.01.1933

விண்ணுலகு
18.03.2021

யா/ நயினாதீவு 7 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சண்முகராசா அவர்கள் நேற்று (18.03.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், வரலெட்சுமி அவர்களின் பாசமிகு கணவரும், கலைவாணி, சந்திரவதனி, தர்மகுலராசா, சத்தியவாணி, சுமந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகீரதன், முருகபத்மராஜா, செல்வகுமாரி, மனோகரன், நிஷாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கணேசு, சிவக்கொழுந்து, நாகரெத்தினம், கோபாலபிள்ளை, இராசமணி, சின்னராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் நாகலெட்சுமி, குணலெட்சுமி ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாயிரதன், ஜெனட் சாய்ரஜா, சுபேஜன், கனகரதன், ஷிவாந்தி, ஸ்ரீஹரி, ஸ்ரீதாஸ், சகானா, ஸ்ரீராகவி, யுகேந்திரன், சயந்தினி, அபிநாஷ், ரிஷாந், வியுஷாந், வர்ஷிகன், அபிராம், அபிசாயிராம் ஆகியோரின் பாசமிகு பேரனும், சாய்லேஸ், சுயேஸ், வைஷ்ரா, அமரா (ஸ்ரீதேவி) சுகனா, சகாதேவி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2021) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**தொலைபேசி இலக்கம்: 077 086 7269**



# இறைவன் எங்கே இருக்கிறான்...?

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

திருமணம் ஆகவேண்டிய பெண் ஒருத்தி இருந்தாள் அவளுடைய பெற்றோர் சொந்தத்திலேயே முறைப் பையனைப் பார்த்து அவனுக்கு அவளைத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர்
ஆனால் அந்தப் பெண் " புருஷர்களில் எல்லாம் உயர்ந்தவன் எவனோ அவனையே நான் திருமணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் செய்தாள். பெற்றோர்களும் "உன் இஷ்டப்படியே செய்" என்று விட்டு விட்டனர்.
புருஷர்களுக்குள்ளேயே உயர்ந்தவர் ராஜாதான் . திருமணம் என்றால் எனக்கு அவரோடுதான் என்று அந்தப் பெண் தீர்மானம் செய்து கொண்டு அவ்வூர் ராஜாவைப் பின்தொடர்ந்தாள்.
ஒரு நாள் ராஜா பல்லக்கில் பவனி வந்து கொண்டிருந்த போது எதிரில் காவி உடையுடன் ஒரு துறவி வந்தார் . உடனே ராஜா பல்லக்கை நிறுத்தி அதிலிருந்து இறங்கி வந்து பயபக்தியோடு துறவியை வணங்கி ஆசி பெற்று மீண்டும் பல்லக்கில் அமர்ந்து பவனி வந்தார்
அந்தப் பெண் இந்தக் காட்சியை கண்ணுற்றாள் ராஜாதான் புருஷர்களில் உயர்ந்தவர் என்று எண்ணி இத்தனை நாளும் ஏமார்ந்தேனே! ராஜாவே வணங்கக்கூடிய அளவுக்கு பெருமையுடைய இத்துறவிதான் புருஷர்களிலேயே உயர்ந்தவர் என்று முடிவெடுத்து அத்துறவியைத்தான் திருமணம் செய்து கொள்வது என்று திடமான எண்ணத்தோடு துறவியைத் தொடரலானாள்.
ஒரு நாள் துறவி ஓர் ஆலமரத்தடியில் இருந்த பிள்ளையாருக்கு முன் நின்று தலையில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுவதை அவள் பார்த்தாள். துறவியை விடப் பெரிய ஆற்றல் வாய்ந்தவர் இந்தப் பிள்ளையார் தான், அதனால் பிள்ளையாரைத் திருமணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் பண்ணிக்கொண்டு , துறவியுடன் போகாமல் பிள்ளையாருக்கு பக்கத்தில் அமர்ந்து விட்டாள்.
தெருவில் சென்ற நாய் ஒன்று ஓடிவந்து இந்தப் பிள்ளையார் மீது காலைத் தூக்கி சிறுநீர் கழித்து விட்டு ஓடியது. அதைப் பார்த்தவுடன் "அடடா இந்தப் பிள்ளையாரையும் விட உயர்ந்தது நாய்தான் என்றெண்ணி அந்த நாயைத் துரத்திக் கொண்டு அவள் போக ஆரம்பித்தாள்.
தெருவில் ஓடுகின்ற அந்த நாயை ஒரு பையன் கல்லால் அடித்தான் அது "வள் வுள்.." என்று குரைத்துக் கொண்டு ஓடியது .
உனக்கு அறிவிருக்கிறதா? ஏன்டா அந்த நாயை அடித்தாய் என்று அந்தப் பையனை ஒருவன் பிடித்துக் கொண்டு அதட்டினான்.
நாயைக் காட்டிலும் நாயை அடித்தவன் பெரியவன் என்று எண்ணினேன் அடித்தவனை திருப்பி அடிக்கும் இவன் தான் புருஷர்களிலேயே உயர்ந்தவன் என்று தீர்மானித்தாள் அந்தப் பெண்
கடைசியில் அவள் கண்டுபிடித்த அந்த ஆண்மகன் தான் அவளுடைய பெற்றோர் முதலில் அவளுக்கு தீர்மானம் பண்ணியிருந்த முறை மாப்பிள்ளை. மிகத்தொலைவில் யாரோ இருப்பதாக எண்ணி சுற்றினாள் . கடைசியில் அவன் அவளுக்கு அருகிலேயே இருந்தவனாகப் போய் விட்டான்.
அதுபோல "எங்கோ தூரத்தில் இருக்கிறான் கடவுள்" என்று ஊரெல்லாம் சுற்றுகிறோம்.
தெரியாதவரையிலும் அவன் தூரத்தில் இருப்பவன்தான். ஊரெல்லாம் சுற்றினாலும் அவனைப் பார்க்க முடியாது. அவன் உனதருகில், உன் உள்ளத்திலேயே இருப்பவன் என்பதை உணர வேண்டும் அவனே இறைவன். அவன் எம் அருகில் தான் இருக்கிறான். அவனை முதலில் நம்ப வேண்டும். விழித்திருந்து அவனைப் பூசிக்க வேண்டும். அவன் எம்மோடு வாழ்கின்றான். எம்மை வாழவைக்கின்றான்.

# இன்றைய அவசிய தேவை கடந்த காலத்தின் ஒற்றுமை

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19
கடந்த காலத்தில் காணப்பட்ட ஒற்றுமையின் உணர்வை நிகழ்காலத்துக்குக் கொண்டுவந்தால் நாம் மீண்டும் உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளலாம். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அலரி மாளிகையில் இடம்பெற்ற உலகக் கிண்ண வெற்றியின் 25 ஆவது ஆண்டு தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
நிகழ்காலத்தை சரிசெய்ய கடந்த காலம் முக்கியமானதாகும். அன்று அரங்கில் விளையாடியவர்கள் சாதாரண துடுப்பாட்ட வீரர்கள் அல்லர். நாட்டை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற உணர்வு கொண்ட இளைஞர்களாவர். அன்றைய எமது வெற்றியை ஆசிய நாடுகள் தாம் பெற்ற வெற்றியாகவே கருதின. ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் அன்று எமது நாட்டில் நடைபெறும் உலகக் கிண்ண போட்டியில் விளையாட முடியாது எனக் கூறின. இலங்கையில் அக்காலப்பகுதியில் காணப்பட்ட பயங்கரவாதம் மற்றும் கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு போன்ற சம்பவங்களையே அவர்கள் இலங்கைக்கு வரா திருப்பதற்கான காரணங்களாக குறிப்பிட்டனர். எமது விமான நிலையங்கள் போன்றே எமது துறைமுகங்களும் உலகின் பாதுகாப்பற்ற இடங்களாக பல முறை பெயரிடப்பட்டன. அவ்வாறான தொரு நிலைமையில் நான் மேலே குறிப்பிட்ட நாடுகள் உலகக் கிண்ணத்தை வழங்கினாலும் இலங்கைக்கு வர முடியாது எனக் குறிப்பிட்டன. நாம் உலகக் கிண்ணத்தை வென்ற போட்டி பாகிஸ்தானிலேயே இடம்பெற்றது. எமக்கு நிகழ்காலத்தை சிறப்பாக கட்டியெழுப்பவே கடந்த காலம் உள்ளது. இன்று எமக்கு கிரிக்கெட் விளையாட்டை கட்டியெழுப்புவதற்கான சிறந்ததொரு பாடமாக கடந்த காலமே உள்ளது. அந்த கடந்த காலத்தை நிகழ்காலத் துக்கு கொண்டு வந்தால் இன்று நாமுள்ள துயர நிலையிலிருந்து விடுபட முடியும் என நான் நம்புகின்றேன். கடந்த காலத்தில் காணப் பட்ட ஒற்றுமை, மனிதநேயம் என்பவற்றை நிகழ்காலத்துக்கு கொண்டு வந்தால் மீண்டும் அதேபோன்றதொரு வெற்றியைப் பெற முடியும் என நான் நம்புகின்றேன் என்றார். (ஐ)

# தாக்குதலில் சாரதி காயம்

சாவகச்சேரி, மார்ச் 19
ஓட்டோ சாரதி ஒருவர் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு கல்வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது; ஓட்டோ சாரதி ஒருவர் அப்பகுதியைச் சேர்ந்த ஓட்டோ திருத்துநரை தொலைபேசியில் அழைத்து தகாத வார்த்தைகளைப் பிரயோகித்ததுள்ளார் என்றும், இதனால் ஆத்திரமடைந்த திருத்துநர் சாரதியின் வீட்டுக்கு சென்று வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் சாரதியை தாக்கினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)

# நாட்டில் இனவாதம் மேலோங்குகின்றது

## எச்சரிக்கின்றார் மங்கள

கொழும்பு,மார்ச் 19
நாட்டில் பெரும்பான்மைவாதம், இனவாதம் மற்றும் இஸ்லாமிய எதிர்ப்பு போன்றவை மேலோங்குகின்றன. இது நாட்டுக்கு நல்லது அல்ல என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். அவர் தனது டுவிற்றர் பக்கத்தில் இதனைப் பதிவிட்டுள்ளார்.
தன்னிச்சையாக இடம்பெறும் கைது நடவடிக்கைகள், இளம் சூழலியலாளர் மீதான அடக்குமுறை போன்ற சம்பவங்கள் தற்போது அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் சுதந்திர ஊடகவியலாளர்கள் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன என்றும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (க-இ)

# திறந்த போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 19
வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகைமை பெற்றிருந்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் " செயலாளர் , மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு. வக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி , நல்லூர், யாழ்ப்பாணம் " என்னும் முகவரியுடனோ அல்லது 0212219939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் .
எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# பல்கலைக்கழகங்கள் விரைவில் ஆரம்பம்

கொழும்பு,மார்ச் 19
நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் விரைவில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பது தொடர்பில், சுகாதார அமைச்சுடன் தற்போது பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுகின்றது.

தற்போது பல்கலைக்கழகங்களில், பரீட்சைகள் இடம் பெறுகின்றன. சுகாதார ஆலோசனைகளுக்கு அமைவாக பல்கலைக்கழகங்களை மீளத் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)


## St. Patrick's College, Jaffna
புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்
### புதிய அனுமதி - 2022

2022ம் ஆண்டுக்கான தரம்1 புதிய அனுமதி விண்ணப்பப்படிவங்களை கல்லூரி நாட்களில் காலை 8.00 மணியிலிருந்து பிற்பகல். 3.30 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- தரம் 1ற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2016 - 31.01.2017 இற்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வந்து ஒப்படைக்கவும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாள் 03.05.2021.

அதிபர்

## ஏல விற்பனை

எமது அலுவலகத்தில் பாவிக்கப்பட்ட தளபாடங்கள், கணினி உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் போன்ற பொருட்கள் 24.03.2021 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் எமது அலுவலகத்தில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு
## விலைக்கேள்விக்கானகோரல் - 2021

1. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவுற்காக, பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றேன்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டிவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும், இருப்பினும் வியாபார பதிவினை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்கமுடியும்.
3. விலைக்கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(i) ம் இலக்க30.09.2016 ம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் செல்லுபடியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5), Schedule (பகுதி 3) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 229 0111) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
6. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக கீழ்வரும் அட்டவணையின் படி காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 19.03.2021 தொடக்கம் 08.04.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் 09.04.2021 ஆந் திகதி 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள்09.04.2021 ஆம் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்
8. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் 31.03.2021 ஆம் திகதி 11.00 மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in millions) | Contract Period | Required Grade | Required Bid Security | | Non-refundable fees(Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period | |
| NP/MU/2021/03/PSSP/B/01 | Construction of Ambulance Garage with Driver's Room at DH-Naddankandal | 3.20 | 89 Days | C8 and C7 (Buildings) | 33,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/PSDG/B/02 | Construction of Mortuary BH Mankulam | 8.04 | 121 Days | C7 and C6 (Buildings) | 81,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/PSDG/B/03 | Construction of Kitchen BH Mankulam | 7.31 | 117 Days | C7 and C6 (Buildings) | 73,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/ 03/PSSP/B/04 | Modification and Improvement of OPD building at DH-Alampil | 6.57 | 113 Days | C7 and C6 (Buildings) | 66,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/PSDG/B/05 | Construction of Vehicle Park at AMC Mankulam | 0.89 | 67 Days | C9 and C8 (Buildings) | 9,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/PSDG/B/06 | Improvement of RMO/AMC Office to accommodate COVID treatment center staff at AMC Mankulam | 0.53 | 57 Days | C9 and C8 (Buildings) | 6,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/Line/B/07 | Improvement & Renovation of Drug store at RMSD | 1.50 | 74 Days | C9 and C8 (Buildings) | 15,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/Line/B/08 | Improvement & Renovation the raking system to increase Drug store capacity at BH Mankulam | 0.42 | 47 Days | C9 and C8 (Buildings) | 5,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/PSDG/B/09 | Improvement of Doctors Summary Quarters at BH Mallavi | 0.47 | 53 Days | C9 and C8 (Buildings) | 5,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |

வைத்திய கலாநிதி. மு.உமாசங்கர்
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு


# மஹிந்தவுடன் இணைந்தே எனது சேவைகள் தொடரும்

*பிள்ளையான் தெரிவிப்பு*

மட்டக்களப்பு,மார்ச் 19
எனக்கு வாக்களித்த அனைவருக்கும் தெரியும் நான் சிறையில் இருந்து வெளிவருவேன், மஹிந்த வுடன் சேர்ந்து வேலைசெய்வேன் என்று. மக்கள் அதற்காகவே எனக்கு வாக்களித்தனர். அவர்கள் விருப்பப்படி மஹிந்தவுடன் இணைந்து மக்கள் சேவைகளைத் தொடர்வேன்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தேற்றாத்தீவு, உப்புவெட்டிக்குளத்தின் புனரமைப்பு பணிகளின் ஆரம்ப நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் இந்த நிலத்தைப் பயன்படுத்தி இங்கே வாழ்ந்தேயாக வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாத காரணத்தால் பலர் நாட்டை விட்டுச் செல்லும் நிலையேற்படுகின்றது.

இந்த அரசின் கொள்கை எமது மண்ணுக்குப் பொருத்தமான கொள்கை. நல்லாட்சி அரசு எதனையும் இங்கு செய்யவில்லை. மண்டூர் பாலத்துக்கு கல்வைத்தார்கள். அந்தப் பாலத்தை இன்னும் காணவில்லை. நாங்கள் அவ்வாறு செய்ய மாட்டோம்.

கடந்த போர்க்காலத்தில் நாங்கள் எதைப் பற்றியும் சிந்திக்க முடியாத நிலையில் இருந்தோம். நாணல்புற்கள் இருந்தால் மட்டுமே, எங்களால் ஒளியமுடியும். அந்த நிலைமை இன்று மாற்றம் பெற்றுள்ளது. இன்று அந்த நாணல்புற்களை அழித்து, அணைக்கட்டுகளை அமைக்கின்றோம். என்றார். (க-இ)

# இளைஞர் யுவதிகளுக்கு ஜப்பானில் வேலைவாய்ப்பு

கொழும்பு, மார்ச் 19
ஜப்பான் நாட்டில் இலவசமாக தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் இலங்கையின் இளைஞர் யுவதிகளுக்கு கிடைத்துள்ளன.

இது தொடர்பாக நாட்டின் இளைஞர் யுவதி களுக்கு தெளிவூட்டும் வேலைத் திட்டமொன்று நாளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இடம்பெறவுள்ளது.

ஜெ.எல்.பி.ரி அல்லது என்.ஏ.ரி பரீட்சையில் சித்தியடைந்தோர் இந்த தெளிவூட்டல் வேலைத்திட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு 0112789367 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (ற-இ)

# டிஜிற்றல் முத்திரைகள் வெளியீடு

கொழும்பு,மார்ச் 19
25 ரூபா பெறுமதியான டிஜிற்றல் முத்திரைகள், இலங்கை அஞ்சல் திணைக்களத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டன.

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலலவின் ஆதரவுடன், வெகுஜன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சகத்தில் முத்திரைகள் வெளியிடப்பட்டன.

அத்துடன் சிறப்பு பாதுகாப்பு அடையாளத்துடன் 500 ரூபா பெறுமதியான புதிய தபால் முத்திரையும் வெளியிடப்பட்டது. (க-இ)

## தாளையடி தேவாலயத்தில் உண்டியல் உடைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வடமராட்சி கிழக்கு, தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் சகல கதவுகளும் உடைக்கப்பட்டு உள்ளேயிருந்த உண்டியலும் உடைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அதுமட்டுமன்றி, அங்கு காணப்பட்ட புனித பொருள்களும் வீசப்பட்டுள்ளன. அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரி கமராவின் கணினியும் திருடப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)


## மரண அறிவித்தல்

### குமாரசாமி ஶ்ரீதரன்



**தோற்றம்** 02.02.1962 **மறைவு** 18.03.2021

நல்லூர் மூத்த விநாயகர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி ஶ்ரீதரன் நேற்று (18.03.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி குமாரசாமி தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், திரு. திருமதி அமரர் சிவபாலன் கனகமணி தம்பதியரின் அன்பு மருமகனும், திரு.திருமதி கந்தசாமி சிவசோதி ஆகியோரின் பெறா மகனும், இரஞ்சினிதேவி, காலஞ்சென்ற இரவீந்திரன், பவானி (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லோகநாதன், தெய்வேந்திரகுமார் ஆகியோரின் மைத்துனரும், லவீந்திரன், பார்த்தீபன், துஷாயினி, துளசி, டினேஷ்கரன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், பிருந்தா, ரிஷிபவன், மரூபன் ஆகியோரின் அன்பு மாமனும், சுரேஸ்கண்ணாவின் சிறிய தந்தையும், அபிஷ்லா, அஷ்விகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2021) வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மூத்த விநாயகர் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**லோகநாதன் (சிவம்)**
**021 222 1468, 0777 58 4868**

## மரண அறிவித்தல்



### பாலசிங்கம் சற்குணேஸ்வரி (செல்லக்கிளி)

புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகட்டுவானை பிறப்பிடமாகவும் குமானாயன்குளம் அடம்பன், மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சற்குணேஸ்வரி 18.03.2021 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சத்தியபவானி (மன்னார்), கிருஷ்ணகுமார் (ரூபன்- பிரான்ஸ்), கவிதா (பிரான்ஸ்), திருக்குமார (காந்தன்-பிரான்ஸ்), ரஜீவ்குமார் (கிருஷன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சச்சிதானந்தராசா (மன்னார்), பகீரதி (பிரான்ஸ்), லிங்கேஸ்வரன் (பிரான்ஸ்), கஜினி (பிரான்ஸ்), இளவரசி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், லோஜினி, துவாரகன், காமியா, டனுத்துரா, சக்ஷகன், அஸ்விகன், சந்தோஷ், லக்ஷன், நிதேஸ், பிறணிஸ், சஹானா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2021) வெள்ளிக்கிழமை பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆட்காட்டிவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குமானாயன்குளம், அடம்பன்,**
**மன்னார்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 470 3337**

## பதவி வெற்றிடம்

**யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்காக பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

| இல. | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மாதாந்த சம்பளம் |
|---|---|---|---|
| 01 | பொறியியலாளர் (மின்னியல்) | 01 | ரூபா 75,415 |
| 02 | பொறியியலாளர் (இலத்திரனியல்) | 01 | ரூபா 75,415 |
| 03 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) | 01 | ரூபா 41,340 |
| 04 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இலத்திரனியல்) | 01 | ரூபா 41,340 |
| 05 | தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) | 02 | ரூபா 40,140 |
| 06 | தொழில்நுட்ப உதவியாளர் (இலத்திரனியல்) | 02 | ரூபா 40,140 |

**தகைமைகள்**

**1. பொதுவான தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. யாழ் மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித்திகதியன்று 21 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**2. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

**பொறியியலாளர் (மின்னியல்)**

**a. கல்வித்தகைமை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொறியியல் (மின்னியல்) இளமானிப்பட்டம் (B.Sc Engineering in Electrical)

அத்துடன்

இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை சம்பந்தமான அங்கத்துவத்தை பெற்றுக் கொள்வதற்கு தகைமை பெற்றுள்ளமை பற்றி உறுதிப்படுத்துவதற்கு அந்நிறுவனத்தினால் வழங்கப்படும் செல்லுபடியான சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**b. தொழில்சார் தகைமை**

குறித்த துறையிலான அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்

**பொறியியலாளர் (இலத்திரனியல்)**

**a. கல்வித்தகைமை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொறியியல் (இலத்திரனியல்) இளமானிப்பட்டம் (B.Sc Engineering in Electronic)

அத்துடன்

இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை சம்பந்தமான அங்கத்துவத்தை பெற்றுக் கொள்வதற்கு தகைமை பெற்றுள்ளமை பற்றி உறுதிப்படுத்துவதற்கு அந்நிறுவனத்தினால் வழங்கப்படும் செல்லுபடியான சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**b. தொழில்சார் தகைமை**

குறித்த துறையிலான அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்

**தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்)**

**a. கல்வித்தகைமை**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் பிரயோக கணிதம் / தூய கணிதம் / இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி.

அத்துடன்

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களிலும் மற்றுமொரு பாடத்திலும் திறமைச்சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**b. தொழில்சார் தகைமை**

மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (மின்னியல்).

அல்லது

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா (மின்னியல்).

அல்லது

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற உயர்தேசிய பொறியியல் டிப்ளோமா (மின்னியல்).

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா (மின்னியல்).

அல்லது

இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியலாளர் பரீட்சை (மின்னியல்) I ஆம் பகுதியை சிறப்பாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 06 இற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இலத்திரனியல்)**

**a. கல்வித்தகைமை**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் பிரயோக கணிதம் / தூய கணிதம் / இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி.

அத்துடன்

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களிலும் மற்றுமொரு பாடத்திலும் திறமைச்சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**b. தொழில்சார் தகைமை**

மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (இலத்திரனியல்).

அல்லது

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா (இலத்திரனியல்).

அல்லது

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற உயர்தேசிய பொறியியல் டிப்ளோமா (இலத்திரனியல்).

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா (இலத்திரனியல்).

அல்லது

இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியலாளர் பரீட்சை (இலத்திரனியல்) I ஆம் பகுதியை சிறப்பாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இலத்திரனியல்) துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 06 இற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்)**

**a. கல்வித்தகைமை**

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் மொழி அல்லது இலக்கியம் (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**b. தொழில்சார் தகைமை**

மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மின்னியல் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 05 இற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**தொழில்நுட்ப உதவியாளர் (இலத்திரனியல்)**

**a. கல்வித்தகைமை**

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் மொழி அல்லது இலக்கியம் (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**b. தொழில்சார் தகைமை**

மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 05 இற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஆட்சேர்ப்பு முறை**

நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளிவரிசை ஒழுங்கிற்கு (Merit Order) ஏற்ப தெரிவு மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரி தனது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு "ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 31.03.2021 ம் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**18.03.2021**

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்**

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு
### பெறுகைக்கான அழைப்பு
## மருத்துவ உபகரணப்பொருட்கள் வழங்கல் - 2021

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழுதலைவர் தகுதியான தகைமை வாய்ந்த மருத்துவ உபகரண பொருட்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருட்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றேன்.

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| PSSP/MEP/2021/01 | Autoclave | 4 | 48,000.00 |
| PSSP/MEP/2021/02 | Bp Apparatus Aneroid | 17 | 12,000.00 |
| | BP Apparatus Digital | 10 | |
| | Stethoscope | 03 | |
| PSSP/MEP/2021/03 | ECG Machine | 03 | 41,000.00 |
| | Hand Held Doppler | 06 | |
| | Multipara monitor (Basic) | 04 | |
| | Nebulizer | 03 | |
| | Ophthalmoscope | 02 | |
| | Pulse Oxy Meter (adult) | 01 | |
| | Suction Apparatus | 01 | |

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| PSSP/MEP/2021/04 | Folding Screen | 04 | 16,000.00 |
| | Folding Screen | 04 | |
| | IV Stand | 06 | |
| | Medicine Trolley | 12 | |
| | Ward Round Trolley | 05 | |
| | Wheel Chair | 02 | |
| | Oxygen Regulator | 04 | |
| | Stretcher | 02 | |

- விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரண பொருட்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
- நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/- காசாகசெலுத்தி ஆங்கில மொழி யிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலகநாட்களில் 19.03.2021 தொடக்கம் 08.04.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- விலைக்கேள்விகள் 09.04.2021 ஆந் திகதி 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ் விலைக்கேள்விகள் 09.04.2021 ஆந் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக் கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
- தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் ( T.P:021 229 0111, Fax : 021 2290 104 ) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.
- கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதி யினை மட்டும் ஏற்றுக்கொள்ளவதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய் வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**முல்லைத்தீவு**

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

### பிரிவு-32

க.பொ.த (சா/த)- 2021 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான குறுகிய கால பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

★ English Courses:
Foundation Diploma / Diploma in English / Spoken English

★ Computer Courses:
Foundation Diploma / Diploma in ICT / Ms-Office/ Website Development / Programming.
★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ் ★ அடிப்படையிலிருந்து

● **ICT வகுப்புக்கள்**
பாடசாலை மாணவர்களுக்கானது Grade 10,11,A/L ஆரம்பமாகின்றன

● **English,ICT** ஆசிரிய சேவை 3-II
போட்டிப் பரீட்சை வகுப்புகள் நடைபெறுகின்றன

★ SINHALA சிங்கள வகுப்புக்கள்:
பிரபல சிங்கள விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு - 11.00 - 12.30
★ சான்றிதழ் ★ அடிப்படையிலிருந்து
★ எழுத்து, பேச்சு கற்பிக்கப்படும்.

★ IELTS / LIFE SKILLS - A1,B1
BATCH - V
பிரபல விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு 3.00 - 5.00 PM
● Band Score : 7.5 ● 30% Discount
● Sample papers/Mock Exam
● Smart Class room

HND Courses
● HND IN SOFTWARE ENGINEERING
● HND IN NETWORK ENGINEERING
Duration : 6 Months
★ Certificate ★ UK, America, Canada.

ஆரம்பம் 20-3-2021 / 27,28-3-2021
10.00 AM, 4 PM

**IPS CAMPUS**
பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4640229
076 685 2529

## மரண அறிவித்தல்



பிறப்பு 12 - 05 - 2010

இறப்பு 16 - 03 - 2021

### செல்வி சைதன்யா சிவரூபன்

கனடாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட செல்வி சைதன்யா சிவரூபன் 16..03.2021 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு.திருமதி சிவரூபன் (கோண்டாவில்) வைலஜா (மண்டைதீவு - சாவகச்சேரி) தம்பதிகளின் அன்பு மகளும், ஆகித்யன், அபர்ணியா ஆகியோ-ரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், இரத்தினம்மா தம்பதிகள் மற்றும் வைகுந்தராஜா, தையல்நாயகி (தேம்பாள்) தம்பதிகளின் பேர்த்தியும், சிவசுதானந்தம் - தேவா, சிவஞானந்தன் - யோகேஸ்வரி, சரோஜினி தேவி - ஜெயராசா, ரஞ்சனாதேவி - ரவி, ராகினி - சீலன், ரூபினி - இந்திரன் காலஞ்சென்ற இன்பம் ஆகியோரின் பெறாமகள் மற்றும் மருமகளும் ரஜினிகாந் (மதன்) - பிரியா, சசிகாந்த் (ரதன்) - சாம்பவி, கிந்துஜா - பரதன் ஆகியோரின் மருமகளும் பெறாமகளும் அஜீஸ், அக்ஷி, அர்ஜீன், அஸ்வத், அஸ்விகா, அத்மிகா, அதிரா, அயேத்திரா, ஜாணுயா, துவாரகன், ரேனு, சிவானுஜன், சாருஜா, தனுக்சன், சுபிகரன், சுபாகரன், ரஜினி, கார்த்திகன், கார்த்திகா, துர்க்கா, லக்ஷன், டசிந்தா, பவித்திரன், ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.03.2021 வியாழக்கிழமை கனடாவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**8911 woodbine Ave, Markham on L3R5G1, Canada,**

**தகவல்**
**குடும்பத்தினர்**

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



எமது குல விளக்கு

### அமரர் திருமதி சின்னத்தம்பி பாக்கியம்

கடந்த 17.02.2021 புதன்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் மறைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து உடன் இருந்து ஆறுதல் கூறி உதவிகள் புரிந்த, உறவுகளிற்கும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்து கொண்டோர்க்கும், சமூக வலைத்தளங்கள் மூலம் இரங்கல் தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (19.03.2021 ) வெள்ளிக்கிழமை மருதடி வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் இடம்பெற்று அதனை தொடர்ந்து துர்க்கா மணி மண்டபத்தில் (நல்லூர்) மதியபோசன நிகழ்வு இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**குடும்பத்தினர்**

# புடின் கொலையாளி

## பைடன் விமர்சனம்!!

**வொஷிங்டன், மார்ச் 19**
**ரஷ்ய அதிபர்புடினைகொலையாளி என்று விமர்சித்துள்ளார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன். இதையடுத்து அமெரிக்கா, ரஷ்யா இடையிலான மோதல் முற்றியுள்ளது.**





அமெரிக்க அதிபருக்கான தேர்தல் அண்மையில் நடைபெற்றது. இந்தத்தேர்தலில்ஜனநாயகக்கட்சியின் வேட்பாளரான பைடன் குடியரசுக் கட்சியின் முன்னாள் வேட்பாளரும் அமெரிக்காவின்முன்னாள்அதிபருமானட்ரம்பைஎதிர்த்துபெரும்வெற்றியைப் பதிவுசெய்து ஜனாதிபதியானார். அமெரிக்க உளவுத்துறை அண்மையில் விடுத்துள்ள அறிக்கையில், அமெரிக்க அதிபர்தேர்தலில்பைடனுக்கு எதிராக ரஷ்யா சதி செய்தது. ட்ரம்ப் ஆட்சிப்பீடம் ஏற வேண்டும் என்று ரஷ்யா விரும்பியது. ரஷ்யாவின் இந்தத் தலையீடு அதன் அதிபர் புடினின் மேற்பார்வையில் நடந்தது என்று குறிப்பிடப்பட்டது.

பைடன் நேற்றுமுன்தினம் செய்தியாளர்சந்திப்பொன்றைநடத்தினார். இதில், ரஷ்யத்தலையீடு தொடர்பில் பைடனிடம்கேள்விஎழுப்பப்பட்டது. இதற்குப் பதில் வழங்கிய பைடன், 'ஆம் அது உண்மை. இதற்கான விலையை பைடன் கொடுப்பார். அவர் ஒரு கொலையாளி' என்று விமர்சித்தார். இதையடுத்து அமெரிக்கா - ரஷ்யா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. (ம)

### அமெரிக்காவுக்கான தூதுவரை ரஷ்யா திரும்புமாறு உத்தரவு!

#### புடின் அதிரடி

மொஸ்கோ, மார்ச்19
ரஷ்ய அதிபர் புடினை கொலையாளி என்று அமெரிக்க அதிபர் பைடன் விமர்சித்துள்ள நிலையில், அமெரிக்குக்கான ரஷ்யத் தூதுவரை மொஸ்கோ திரும்புமாறு புடின் உத்தரவிட்டார். இதையடுத்து வொஷிங்டனில் இருந்த ரஷ்யத் தூதர் அனடோலி அன்டோனோவ்வை ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவுக்குத்திரும்பியுள்ளார். (ம)



## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### பரீட்சைகளை....

ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் - என்றார். (ப-22)

### பிறந்து....

புதைத்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் அந்தப் பெண்ணின் உடல் மாற்றங்களை அவதானித்து அயலவர்கள் கேட்டபோது, வயிற்றில் கட்டி உள்ளது என்று அவர் கூறியிருக்கிறார். அண்மைய நாள்களில் அவரது உடல் மாற்றங்களில் சந்தேகம் கொண்ட ஒருவர் இது தொடர்பில் கிராம அலுவலருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். கிராம அலுவலரும், பொலிஸாரும் இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டனர்.

இதனையடுத்து, அந்தப் பெண்ணை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய போது அவர் குழந்தை பிரசவித்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. எனினும் அந்தப் பெண் அதை மறுத்திருக்கிறார். சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் அந்தப் பெண்ணைக் கைதுசெய்துள்ளனர். புதைக்கப்பட்ட சிசுவின் உடல் நீதிவான் முன்பாக வெளியே எடுக்கப்பட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ110)

### இந்தியா ...

நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மான வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்மான வரைவை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று, அதனைச் சமர்ப்பித்த பிரிட்டன் இந்தியாவுடன் பேச்சு நடத்தியுள்ளது. புதுடில்லியிலுள்ள பிரிட்டன் தூதுவர், இந்திய வெளிவிவகார அமைச்சுடன் பேச்சு நடத்தினார் என்று கூறப்படுகின்றது. இதேவேளை இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலர், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காது என்றும் இலங்கைக்கு பக்கபலமாக இருக்கும் எனவும் இந்தியா உறுதியளித்துள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

இந்தத் தகவலை இந்திய வெளிவிவகார அமைச்சு உயர் அதிகாரிகள் மறுத்துள்ளனர். இலங்கை விடயத்தில் இந்தியா இன்னமும் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஒ-5,22)

### மானிப்பாய்...

செய்யப்பட்டுள்ளது. சங்கானை மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள். யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டவர். இன்னொருவர் ஏற்கனவே இனங்காணப்பட்ட தொற்றாளருடன் தொடர்புடையவர்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் மானிப்பாய் மருத்துவமனையில் பணியாற்றும் தாதியாவார். சாவகச்சேரியில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்டவருடன் தொடர்பில் இருந்தவர்.

வவுனியாவில் 5 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 4 பேர் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்டவருடன் தொடர்பில் இருந்தவர்கள். ஒருவர் வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் பணிற்றுபவர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

### இந்திராபுரத்தில்...

வாரம் அயலில் நடந்த இறப்பு வீடொன்றில் கலந்துகொண்டுள்ளார். இவருடன் தொடர்புபட்டவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கிளிநொச்சி, அறிவியல் நகரில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் கல்விசாரா ஊழியராகப் பணியாற்றுகின்றார். இவர் உத்தியோகத்தர்கள் பயணிக்கும் பஸ்ஸில் பணிக்குச் சென்று வந்துள்ளார். இவர் யாழ்ப்பாணத்துக்கும் சென்று வந்துள்ளார். கடந்த 13 அல்லது 14ஆம் திகதிகளில் இவருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. 15ஆம் திகதி வைத்தியசாலைக்குச் சென்றபோது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

9ஆம் திகதி மற்றும் 10 ஆம் திகதிகளில் இந்திராபுரத்தில் நடந்த இறுதிச் சடங்கில் கலந்துகொண்டுள்ளார். அந்த இறுதிச் சடங்கில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டுள்ளனர். தொற்றாளர் புதுமனைப் புகுவிழா ஒன்றிலும் கலந்து கொண்டுள்ளார். இந்திராபுரத்தில் உள்ள கரப்பந்தாட்ட மைதானத்திலும் விளையாடியுள்ளார்.

இவருடன் தொடர்பைப் பேணிய 20 குடும்பங்கள் இதுவரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தொடர்புள்ளவர்களை இனங்காணும் நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுபவர்கள் அதன் முடிவுகள் கிடைக்கும் வரையில் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என்றும், தொற்று அறிகுறி தென்பட்டால் அது தொடர்பாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் தெரியப்படுத்த வேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-6)

### இலங்கை...

கப்பல் பாதை ஊடாக இல ங்கைக்குத் திரும்புகின்றன. ஆனால் போதைப்பொருள் தேடுகின்றோம் எனத் தெரிவித்து, இந்தியக் கடலோரக் காவல்படை ரோலர்களைத் தடுத்து நிறுத்துகி ன்றது. இவற்றால் ஏற்படும் தாமதங்களால், மீன்கள் பழுதடைதல், எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மீனவர்கள் தேவையில்லாது துன்புறுத்தப்படுதல் போன்ற செயற்பாடுகள் தொடர்கின்றன"என்று பலநாள் மீன்பிடிப் படகுகளின் உரிமையாளர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. (எ-இ)

### ஐ.நா....

தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தராத இதுபோன்ற தீர்மானங்களை, இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கும், தமது சுயநலன்களை அடிப்படையாகவும் கொண்டே வல்லரசு நாடுகள் கொண்டு வருகின்றன.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேசத்திடமே தமிழ் மக்கள் நீதியைக் கோருகின்றனர். அதனடிப்படையில் இலங்கையை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

தற்போது கொண்டுவரப்படும் தீர்மானத்தால் தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்துவிடாது. கடந்தமுறை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை விடவும் வலுக் குறைந்ததாகவே இந்தத் தீர்மானம் இருக்கின்றது. இலங்கை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்பதை ஐ.நாவின் இன்னாள் ஆணையாளர்களும் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களுக்கான நீதியை பெற்றுக் கொள்வதற்கு ஒட்டுமொத்த தமிழர் தரப்பும் ஒருமித்த நிலைப்பாட்டில் இந்தக் கோரிக்கையை வலுப்படுத்த வேண்டும். வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து தமிழினப் படுகொலைகளுக்கு நீதி கோரி தொடர் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டுமென்பதே பிரதான கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் மக்கள் எழுச்சிப் பேரணி நடத்தப்பட்டது. இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பிலும் பேரணி நடத்தப்பட்டுள்ளது. அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்றார். (எ-இ)

### மாகாண...

இந்த நிலையில் ஆளும் கட்சியின் மாவட்டத் தலைவர்களுக்கும், அரச உயர்மட்ட பிரமுகர்களுக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இதன்போதே தேர்தலுக்குத் தயாராகுமாறு பணிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்புக்கு முன்னர் ஆளும் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களையும் உயர்மட்ட தலைவர்கள் சந்தித்து கலந்துரையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. என்பவையும் தேர்தலை சந்திப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகளை ஆரம்பித்துள்ளன. வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அரச பங்காளிக்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

# கழிவகற்றலை பாதுகாப்பான முறையில் முன்னெடுங்கள்

### கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் வேண்டுகோள்

முல்லைத்தீவு, மார்ச் 19

முல்லைத்தீவு நகர கழிவகற்றல் செயற்பாட்டின் போது வீதிகளில் கழிவுகள் கொட்டப்படுகின்றன. எனவே கழிவகற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவோர் பாதுகாப்பான முறையில் கழிவு அகற்றலை மேற்கொள்ளுமாறு கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் செல்வராஜா ரஜிதா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சபை அமர்வுகளில் கழிவகற்றலில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக பல தடவைகள் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. முல்லைத்தீவு நகரக் கழிவுகள் உட்பட சேகரிக்கப்படும் கழிவுகள் தண்ணிரூற்று நெடுங்கேணி வீதியின் கயட்டைப் பகுதியில் கொட்டப்படுகின்றன. முல்லைத்தீவு நகரில் இருந்து பாதுகாப்பற்ற முறையில் எடுத்து வரப்படும் கழிவுகள் வீதிகளில் கொட்டப்படுவதை நான் நேரடியாகவும் பார்த்திருக்கின்றேன். இதனைப் பொது மக்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பில் சபை அமர்வில் பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக பிரதேச சபை பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கழிவுகள் பாதுகாப்பாக அகற்றப்பட வேண்டும் என்பதே முக்கியமானதாகும். பாதுகாப்பற்ற கழிவகற்றல் பல்வேறு பிரச்சினைகளையும் நோய்களையும் உருவாக்கும் - என்றார். (ற-13)

# காணி உரிமை தொடர்பில் தகவல்கள் திரட்டு

கைதடி, மார்ச் 19

கைதடி வீட்டுச் சங்கத்தால் வழங்கப்பட்ட காணியில் வசிப்பவர்களின் காணி உரிமை தொடர்பான தகவல்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் திரட்டப்படுகின்றன.

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள சிங்கமலைத் தோட்டம் பகுதியில் (கைதடி வடக்கு மாகாண சபைக்கு அருகாமையில் ) உள்ள காணிகளின் விபரங்களே திரட்டப்படுகின்றன. இக் காணிகளில் குடியிருப்போர் தமது உறுதிகளுடன் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# 275 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, மார்ச் 19

கொரோனாத் தொற்றுக் காரணமாக கட்டார் மற்றும் துபாயில் சிக்கித் தவித்த 275 இலங்கையர்கள் நேற்று நாட்டை வந்தடைந்தனர். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 21 விமானங்கள் பயணித்துள்ளன.

இந் நிலையில் 11 விமானங்கள் ஊடாக 725 பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். நாட்டை வந்தடைந்த அனைவரையும் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இக் காலப்பகுதியில் 10 விமானங்கள் மூலமாக 450 பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர். (ஐ-இ)

# குறை வீட்டுத் திட்டத்துக்கான நிதியைப் பெற்றுக் கொடுங்கள்!

### சாள்ஸ் எம்.பி வலியுறுத்து



**முல்லைத்தீவு, மார்ச் 19**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட நிரந்தர வீடுகளுக்கான மிகுதிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆட்சி மாற்றத்தால் கடந்த நல்லாட்சியின் போது தொடங்கப்பட்ட வீடுகள் நிவர்த்தி செய்யப்படாது குறையாகக் காணப்படுகின்றன. எந்த அரசாங்கம் வீடுகளை வழங்கியது என்பது பிரச்சினையல்ல. இதனால் பாதிக்கப்படுவது மக்கள் தான். நாம் இப்போது அரசுக்கு அழுத்தங்கள் கொடுக்க முடியாத நிலையில் உள்ளோம். தற்போது அரசில் அங்கம் வகிப்பவர்கள் எமது மக்களின் நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு வீடுகளுக்கான மிகுதிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிகளை ஏற்படுத்துங்கள். மாவட் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக வுள்ள காதர் மஸ்தான் இதற்கான முயற்சிகளை அதிகமாக எடுக்க வேண்டும் - என்றார். இதன்போது கருத்துத் தெரிவித்த காதர் மஸ்தான், மக்களிடம் நாம் செல்கின்ற போது தமது வீட்டுப் பிரச்சினையைக் கூறுகின்றார்கள். நாமும் முயற்சி செய்து கொண்டே இருக்கின்றோம். முயற்சி வெற்றியில் முடியும் எனத் தெரிவித்தார். (ற-13)

# விவசாய அபிவிருத்திக்காக வன்னிக்கு ரூ.3000 மில்லியன்

### விவசாய அமைச்சர் தெரிவிப்பு



வவுனியா,மார்ச்.19

வன்னியில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் விவசாய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்ப தற்கு என்று 3 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

வவுனியாவில் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கலந்துரையாடல் ஒன்று அமைச்சரின் பங்கேற்புடன் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

விவசாய அபிவிருத்தித் திட்டங்களு க்காக வன்னி மாவட்டத்துக்கு இந்த வருடம் 3 ஆயிரத்து 314 மில்லியன் நிதி ஒதுக்கியுள்ளோம். அந்த வகையில் வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 352 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஆயிரத்து 699 மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்டத்துக்கு 62 மில்லியன் ரூபாவும் என பிரித்து வழங்கியுள்ளோம்.

குறித்த நிதி விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய திணைக்களங்களூடாகச் செயற்படுத்தப்படும் என்றார்.

இதேவேளை வன்னியில் விவசாயக் காணிகளை யானைகள் சேதமாக்கும் நிலையில் அவற்றுக்கான யானைவேலிகளை அமைத்து நிரந்தர தீர்வை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனால் கோரப்பட்டதுடன், வன உயிரியல் திணைக்களம் மற்றும் வனவளத்திணைக்களங்களால் பொதுமக்களின் காணிகளை எல்லையிடுவது தொடர்பாகவும் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. (ஐ-110)

போட்டிப் பரீட்சை விசேட இறுதி கருத்தரங்கு

LL.B Law College சனி 9.00-3.00

MSO Limited சனி,ஞாயிறு 9.00-3.00

Teaching சனி, 9.00-2.00

வழமையான வகுப்புக்களும் நடைபெறுகின்றன

076 6883 394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி முன் வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

VACANCY

Area Sales Manager (Sal: 120,000/=), Sale Rep, Graphics Designer, Data Entry Operator (Female), Driver, Clerk (Shop-Female)

0741 38 3368

வேலையாட்கள் தேவையா!

உங்கள் நிறுவனங்களுக்கு தேவையான உத்தியோகத்தர்களை (Data Entry Operator, Clerk, Office Staff, Cashier, Driver...) எம்மிடம் தெரிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம்.

dewmasweb.com

0741 38 3368

பொருளியற் கல்லூரி

நாவலர் றோட் - யாழ்ப்பாணம். K.K.S. றோட் சுன்னாகம்.

A/L 2023

கலை, வர்த்தகப் பிரிவு

மார்ச் 28 இல் (ஞாயிறு)

யாழ் நகரில்-8.00AM

சுன்னாகத்தில்-2.00PM

நீங்கள் நன்கு அறிந்த யாழ் மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர்களினால்

பொருளியல் - R.தர்ஷன்
கணக்கீடு - B.முகுந்தன்
வணிகக் கல்வி- S.பிரதீபன்
ICT - T.சுதர்ஷன், K.விதுசன்
தமிழ் - N.சத்தியவேந்தன்
இந்து நாகரீகம்- P.கேதீஸ்வரன் A.மேனன்
புவியியல் - P.S.குமரன்
அரசியல் - S.கோகுலன்
வரலாறு - K.சுதன்
ஊடகவியல் - K.கஜீதரன்
அளவையியல் - S.சயந்தன் N.ஜெயசுரேஸ்
விவசாயம் - S.சிவசஜீவன்
நாடகம் - T.ஜெயசுதன்
கிறிஸ்தவம் - A.யுபின்சன்
சித்திரம் - S.சபேசன்
சங்கீதம் - S.குமுதினி
மனைப்பொருளியல் - K.றஜிதா
ஆங்கிலம் - K.நிஷாந்தன்

Note:-எமது மற்றைய நிறுவனமான BARATHY சித்தன்கேணியிலும் அனுமதிகள் வழங்கப்படுகின்றன

மேலதிக விவரங்களுக்கு:

077 3763511



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.